بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 5

இதழ் 49

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

17 ரபீவுஸ் ஸானீ 1442 ஹிஜ்ரி கமரி ☆ 03 ஃபதஹ் 1399 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
03 டிசம்பர் 2020


### அல்லாஹ்வின் கட்டளை

وَمَنۡ یَّعۡمَلۡ مِنَ الصّٰلِحٰتِ مِنۡ ذَکَرٍ اَوۡ اُنۡثٰی وَھُوَ مُؤۡمِنٌ فَاُولٰٓئِکَ یَدۡخُلُوۡنَ الۡجَنَّۃَ وَلَا یُظۡلَمُوۡنَ نَقِیۡرًا

நம்பிக்கையாளரென்ற நிலையில் நற்செயல்களைச் செய்பவர்கள், ஆணாயினும், பெண்ணாயினும் சொர்க்கத்தில் நுழைவார்கள். அவர்களுக்கு இம்மியளவும் அநீதியிழைக்கப்பட மாட்டாது. (4:125)

### அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஆன்மீகத் தூய்மையைப் பெற விரும்புபவர்களுக்கு புறத்தூய்மையும் சுத்தமும் அவசியமாகும். ஏனென்றால் ஓர் ஆற்றலின் தாக்கம் மற்றொன்றின் மீது ஏற்படுகின்றது. எனவே குறைந்தபட்சம் ஜுமுஆ நாளன்று குளிக்கவும். ஒவ்வொரு தொழுகையிலும் உளூ செய்யுங்கள். சபைகளில் செல்லும்போது நறுமணம் பூசிக் கொள்ளுங்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றிலிருந்து...

## பிளேக் தண்டனையாகும்

அல்லாஹ் அதற்கு رُجۡز (ருஜ்ஸ்) என்று பெயரிட்டுள்ளான். رُجۡز (ருஜ்ஸ்) என்பதற்கு தண்டனைக்கும் கூறுவர். அகராதி புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளது என்னவென்றால், ஒட்டகத்தினுடைய தொடைப் பகுதியில் இந்த நோய் ஏற்படுகின்றது. மேலும் அதில் ஒரு புழு உருவாகி விடுகின்றது. அதனை نَغَفۡ என்று கூறுவார்கள். இதிலிருந்து ஒரு நுட்பமான கருத்து புரிய வருகின்றது. அதாவது ஒட்டகத்தின் நடத்தையில் ஒரு வகையான கட்டுப்படாமை காணப்படுகின்றது. எனவே மனிதர்களிடம் அந்த கட்டுப்படாமையின் நாட்கள் காணப்படும்போது இந்த வேதனைமிக்க தண்டனை அவர்கள் மீது இறங்குகிறது என்ற நுட்பமான கருத்து இதிலிருந்து தெரிய வருகிறது.... இந்த நோய் நீண்ட நாட்கள் நீடிக்கின்றது. மேலும் வீட்டிலுள்ள அனைவரையும் வழியனுப்பி வைத்து விட்டு வெளியேறுகின்றது. இந்த துன்பம் குடும்பங்களை துடைத்து விடுகின்றது. குழந்தைகளை அனாதையாக்கி, எண்ணற்ற இயலாத பெண்களை விதவையாக்கி விடுகின்றது.

رُجۡز (ருஜ்ஸ்) என்ற சொல்லின் பொருளை சீர்தூக்கிப் பார்க்கும்போது அதற்கான காரணம் புரிய வருகின்றது. அதாவது இந்த நோய் அசுத்தம் மற்றும் தூய்மையின்மையால் ஏற்படுகின்றது. எங்கு நல்ல சுத்தம் இருக்காதோ, வீடுகளின் சுவர்கள் அசிங்கமாகவும், கல்லறைகளுக்கு ஒப்பாகவும், வெளிச்சமற்றதாகவும், காற்றோட்டம் இல்லாமலும் இருக்குமோ அங்கு நாற்றத்தின் விஷத்தன்மை உருவாகி விடுகிறது. அதன் மூலம் இந்த நோய் தோன்றி விடுகிறது.

திருக்குர்ஆனில் وَ الرُّجۡزَ فَاهۡجُرۡ (முதஸ்ஸிர்:6) என்று வந்துள்ளது. எல்லா வகையான அசுத்தங்களிலிருந்தும் விலகியிருங்கள். ஹிஜ்ர் என்பது வெகு தூரம் விலகிச் செல்வதற்கு கூறப்படும். இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஆன்மீக தூய்மையைப் பெற விரும்புபவர்களுக்கு புறத்தூய்மையும் சுத்தமும் அவசியமாகும். ஏனென்றால் ஓர் ஆற்றலின் தாக்கம் மற்றொன்றின் மீதும் ஓர் அம்சத்தின் தாக்கம் இன்னொன்றின் மீதும் ஏற்படுகிறது.

## புறத்தூய்மையின் தாக்கம் அகத்தில் ஏற்படுகின்றது

இரண்டு நிலைகள் உள்ளன. எவர் அகப் புற நிலைமையில் இறையச்சத்திலும் தூய்மையிலும் நிலை பெற விரும்புகிறார்களோ அவர்கள் வெளிப்படையான பரிசுத்தத்தையும் விரும்புகிறார்கள். மற்றொரு இடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

اِنَّ اللّٰہَ یُحِبُّ التَّوَّابِیۡنَ وَ یُحِبُّ الۡمُتَطَہِّرِیۡنَ (2:223)

பொருள்: எவர் அக மற்றும் புறத்தூய்மையை தேடுகின்றாரோ அவரை நான் நண்பனாக்கிக் கொள்வேன். புறத்தூய்மை அகத்தூய்மையை பெறுவதற்கு உதவிகரமாக உள்ளது. மனிதன் அதனை கைவிட்டு விட்டால் மலம் கழித்த பிறகு கூட சுத்தம் செய்யவில்லையென்றால் பின்னர் அகத்தூய்மை அருகில் கூட அண்டாது. எனவே நினைவில் கொள்ளுங்கள். புறத்தூய்மை அகத்தூய்மையை பெறுவதற்கு அவசியமாகும். எனவே குறைந்தபட்சம் ஜுமுஆ நாளன்று குளிக்கவும். ஒவ்வொரு தொழுகையிலும் உளூ செய்யுங்கள். சபைகளில் செல்லும்போது நறுமணம் பூசிக் கொள்ளுங்கள். இதன் அடிப்படையிலேயே இரு பெருநாளிலும், ஜுமுஆவிலும் நறுமணம் பூசிக் கொள்வதற்கான கட்டளை உள்ளது.

அசல் காரணம் என்னவென்றால், கூட்டத்தின்போது தொற்றுக்கான அபாயம் உள்ளது. எனவே குளிப்பதும், சுத்தமான ஆடையை அணிவதும், நறுமணம் பூசிக் கொள்வதும் தொற்றை தடுக்கும். அல்லாஹ் உலகில் இதுபோன்று (சட்டங்களை) விதித்திருப்பது போன்று மரணத்திற்குப் பிறகும் சட்டங்களை வைத்துள்ளான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 230,231 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு**


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மக்களில் இறையச்சமுடையவர்கள் எனக்கு அருகில் இருக்கிறார்கள். அவர்கள் யாரானாலும் சரி! எங்கிருந்தாலும் சரி! (நபிமொழி)**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களை யமன் நாட்டுக்கு அனுப்பியபோது கூறினார்கள்: ஆடம்பர வாழ்க்கை வாழ்வதிலிருந்து தவிர்ந்திருங்கள். ஏனெனில், அல்லாஹ்வின் அடியார்கள் ஆடம்பர வாழ்வை மேற்கொள்வதில்லை**

**மீலாதுன் நபி (ஸல்) கொண்டாடப்படுவதற்கான உண்மையான நோக்கம் என்னவென்றால், அன்னார் (ஸல்) அவர்களின் முன்மாதிரி மற்றும் அன்னார் (ஸல்) அவர்களின் அறிவுரைகளின்படி செயல்படுவதற்காகவே ஆகும்**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியும், திருக்குர்ஆனை மனனம் செய்தவரும், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நேசத்திற்குரியவரும், மார்க்க அறிவு கொண்டிருந்த ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) மற்றும் உஹது போரில் முதலில் ஷஹீதான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) ஆகியோரின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 30 அக்டோபர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **இஹா** மாதம் **30 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு சென்று கொண்டிருந்தது. இன்றும் அது தொடர்கிறது. ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் மிகவும் வள்ளலாக இருந்தார்கள். நன்றாகச் செலவு செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். அதன் காரணமாக, அவர்களுக்கு பெரும்பாலும் கடன் வாங்க வேண்டி சேர்ந்தது. கடன் கொடுத்தவர்கள் அதிகம் நெருக்கடி தந்தபோது சில நாட்கள் வீட்டில் ஒளிந்திருந்தார்கள். அப்பொழுது, அந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களிடமிருந்து கடனைப் பெற்று தருமாறு கேட்டுக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆள் அனுப்பி ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களை வரவழைத்தார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களின் சொத்தை விட கடன் அதிகமாக ஆகிவிட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் தனது பங்கைப் பெற மாட்டாரோ அவர் மீது இறைவன் கருணை புரிவான்.

எனவே சிலர் தமது கடனை மன்னித்து விட்டார்கள். ஆனால் சிலர் கடனை தருமாறு கேட்டுக் கொண்டிருந்தனர். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொத்துக்கள் அனைத்தையும் அந்த மக்கள் மத்தியில் விநியோகித்து விட்டார்கள். ஆனால் அப்பொழுதும் முழு கடனும் தீரவில்லை. மாறாக, ஒவ்வொருவருக்கும் கடனின் சில பகுதி கிடைத்து வந்தது. கடன் கொடுத்தவர்கள் மீதமும் எங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று மேற்கொண்டு எதிர்பார்த்தார்கள்.

அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவரை விட்டு விடுங்கள். இப்பொழுது இதை விட அதிகம் கிடைக்க முடியாது. இந்தச் செல்வத்தையே எடுத்துச் செல்லுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களிடம் எதுவும் எஞ்சாதபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை யமன் நாட்டுக்கு அனுப்பி வைத்தவாறு கூறினார்கள்: விரைவில் அல்லாஹ் உமது இழப்பைச் சரி செய்து விடுவான். உமது கடனை கொடுக்க வைத்து விடுவான்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 502 முஆஸ் பின் ஜபல் (ரலி) – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபதிஸ் ஸஹாபா தொகுதி 5 பக்கம் 188 முஆஸ் பின் ஜபல் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா ல இப்னி ஸஅது தொகுதி 3 பக்கம் 440,441 முஆஸ் பின் ஜபல்... – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரு குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அந்தச் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஆஸே! உமக்கு அதிக கடன் இருக்கிறது; உங்களுக்கு யாராவது அன்பளிப்பு கொடுத்தால் அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். அதற்கு நான் உங்களுக்கு அனுமதி வழங்குகிறேன் என்றார்கள்.

(சீரதுஸ் ஸஹாபா தொகுதி 5 பக்கம் 146 முஆஸ் பின் ஜபல் (ரலி) – தாருல் இஷாஅத் கராச்சியில் அச்சிடப்பட்டது)

அன்பளிப்பைப் பெற்றுக் கொள்ள உமக்கு அனுமதியளிக்கப்படுகிறது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களை யமன் நாட்டுக்கு அனுப்பியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் – அதாவது அன்பளிப்பை ஏற்றுக் கொள்வதில் பொதுவாகத் தடை ஏதும் இல்லை. அன்பு அதிகரிக்கிறது; ஒருவர் மற்றவருக்கு அன்பளிப்புகள் கொடுக்க வேண்டும் என்றே கூறப்படுகிறது. ஆனால் இவர்கள் அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிநிதியாக ஆக்கி அனுப்பப்பட்டார்கள்.

எனவே அந்தப் பிரதிநிதித்துவத்தின் காரணமாக உமக்கு மக்கள் அன்பளிப்பு கொடுத்தால், அந்த அன்பளிப்பை நீர் உமக்காகச் செலவழித்துக் கொள்ள உமக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டு கூறினார்கள். ஏனெனில் பொதுவாக அது பைத்துல் மாலுக்காக அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக கொடுக்கப்பட்டு வந்தது.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்னாரை யமன் நாட்டுக்கு அனுப்பியபோது, அவர்களுக்கு அறிவுரை வழங்குவதற்காக அன்னாருடன் வெளியே வருகை தந்தார்கள். ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் பயண விலங்கின் மீது அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் சவாரியுடன் நடந்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேசிமுடித்த பிறகு கூறினார்கள்: மூஆஸே! அடுத்த வருடம் நீர் என்னைச் சந்திக்க முடியாமல் போகலாம். நீர் எனது பள்ளிவாசலையும், கபரையும் கடந்து போகலாம்.

ஹஸ்ரத் மூஆஸ் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டுப் பிரிவதன் காரணமாக, இதைக்கேட்டு கதறி அழ ஆரம்பித்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது கவனத்தை மாற்றினார்கள். மேலும் மதீனாவை நோக்கி அருளுக்குரிய முகத்தை திருப்பியவாறு கூறினார்கள்: மக்களில் இறையச்சமுடையவர்கள் எனக்கு அருகில் இருக்கிறார்கள். அவர்கள் யாரானாலும் சரி! எங்கிருந்தாலும் சரி!

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் முஆஸ் பின் ஜபல் தொகுதி 7 பக்கம் 359 ஹதீஸ் எண் 22402 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களிடம், அந்தச் சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: நீர் விரைவில், வேதத்தை உடையவர்களான அந்த மக்களிடம் செல்வீர். நீர் அவர்களை அடைந்ததும், அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை; முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்று சாட்சி பகர்வதன் பால் அவர்களை அழைப்பீராக! அவர்கள் உமது இந்த விஷயத்தை ஏற்றுக் கொண்டால் பிறகு அவர்களுக்கு கூறும்! அல்லாஹ் அவர்கள் மீது ஒவ்வொரு நாளும் பகலிலும் இரவிலும் ஐந்து தொழுகைகளை கடமையாக்கியுள்ளான்.

அவர்கள் உமது விஷயத்தை ஏற்றுக் கொண்டால், பிறகு அவர்களுக்கு கூறும்! அல்லாஹ் அவர்கள் மீது தர்மம் வழங்குவதைக் கடமையாக்கியுள்ளான். அது அவர்களின் செல்வந்தர்களிடமிருந்து பெறப்பட்டு, அவர்களின் தேவையுடைய மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். பிறகு அவர்கள் உமது இந்த விஷயத்தையும் ஏற்றுக் கொண்டு விட்டால், எச்சரிக்கை! அவர்களின் உயர் தரமான செல்வங்களைச் தர்மமாக பெற வேண்டாம். மாறாக, இடைப்பட்ட ரக செல்வங்களைப் பெறவும். அநீதியிழைக்கப்பட்டவரின் அபயக் குரலிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அவருக்கும் அல்லாஹ்வுக்குமிடையில் எந்த தடையும் இருப்பதில்லை.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி.... ஹதீஸ் எண் 4347)

அநீதியிழைக்கப்பட்டவரின் முறையீட்டிலிருந்து தப்பித்துக் கொள்ளுமாறு குறிப்பாக அறிவுரை வழங்கினார்கள். ஏனெனில் அவருக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் எந்தத் தடையும் இருப்பதில்லை.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யமன் நாட்டுக்கு (காஸியாக) நீதிபதியாக நியமித்து அனுப்பினார்கள். அவர்கள் அந்த மக்களுக்குத் திருக்குர்ஆனையும், மார்க்கத்தையும் கற்றுக் கொடுத்து வந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் தீர்ப்பளித்து வந்தார்கள். ஸகாத்தை சேகரித்து வந்த யமன் நாட்டு பொறுப்பாளர்கள், அவற்றை ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் யமன் நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் (ரலி), ஹஸ்ரத் முஹாஜிர் பின் உமய்யா (ரலி), ஹஸ்ரத் ஸைத் பின் லபீத் (ரலி), ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) ஆகிய ஐந்து சஹாபாக்களுக்குப் பிரித்துக் கொடுத்திருந்தார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 460 முஆஸ் பின் ஜபல் – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது நிர்வாகங்கள் இந்த ஐவரின் பொறுப்பில் இருந்தன. இது ஓர் அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை யமன் நாட்டுக்கு அனுப்பியபோது இவ்வாறு அறிவுறுத்தினார்கள்: ஒவ்வொரு முப்பது பசுவுக்கும் ஸக்காத்தாக ஒரு வயது கன்றைப் பெறுங்கள். ஒவ்வொரு நாற்பது பசுவுக்கும் இரண்டு வயது கன்றைப் ஸக்காத்தாக பெறுங்கள். அதாவது ஸக்காத்தின் விகிதாச்சாரத்தைக் கூறுகிறார்கள். அளவைக் கூறுகிறார்கள்.

பருவ வயதை அடைந்த ஒவ்வொரு ஆணிடமிருந்தும் ஒரு தினார் அல்லது அந்தத் தொகைக்கு நிகராக மஆஃபிர் அதாவது ஒரு யமன் நாட்டு ஆடையை வசூலிக்க வேண்டும். மஆஃபிர் ஒரு கோத்திரத்தின் பெயர் ஆகும். அவர்கள் இந்த ஆடையைத் தயாரித்து வந்தார்கள். அவர்களின் பெயரிலேயே இதற்குப் பெயர் வந்துவிட்டது. இது முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பலின் அறிவிப்பாகும்.

(முஸ்அனத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 348 முஆஸ் பின் ஜபல் ஹதீஸ் எண் 22363 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது & லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 3 பக்கம் 142 – கராச்சி ஆராம்பாகிலுள்ள பீர் முஹம்மது குதுப் கானாபில் அச்சிடப்பட்டது)

அல்லாமா இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களின் கால் சற்று முடமாக இருந்தது. அவர்கள் யமன் நாட்டுக்குச் சென்றபோது, மக்களுக்குத் தொழ வைத்தார்கள். தமது காலை விரித்து விட்டார்கள். அதாவது காலை முன்னால் வைத்தார்கள். அல்லது வலது புறம் வைத்துக் கொண்டார்கள். எவ்வாறு அவர்களின் நிலை இருந்ததோ, எந்தக் காலில் குறையிருந்ததோ அந்த பக்கம் (காலை அகட்டி விட்டார்கள்). மக்களும் அதேபோன்று தாங்கள் கால்களை விரித்துக கொண்டார்கள். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் தொழ வைத்த பின்னர், நான் செய்ததைப்போன்று நீங்கள் செய்துள்ளீர்கள். நல்லது! ஆனால் இனி இவ்வாறு செய்யக்கூடாது. ஏனெனில் எனக்கு சிரமம் இருக்கிறது. எனவே நான் தொழுகையில் எனது காலை விரித்து வைத்தேன் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி சஅது தொகுதி 3 பக்கம் 439 முஆஸ் பின் ஜபல்... – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரு குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது அர்த்தம் என்னவென்றால், என்னைப் பார்த்து நீங்கள் வெளிப்படுத்திய கட்டுப்படுதலின் முன்மாதிரி, எல்லா வகையிலுமே பாராட்டத்தக்கது. கட்டுப்படுதல் இவ்வாறே இருக்க வேண்டும். இமாமுக்குப் பின்னால் முழுமையான முறையில் அவரைப் பின்பற்ற வேண்டும். ஆனால் இது எனது நிர்பந்தம்; சுன்னத் அல்ல. எவருக்கு நிர்பந்தம் இல்லையோ அவர் சரியாக தொழட்டும். எவ்வாறு கட்டளையோ அவ்வாறு சுன்னத்திற்கேற்ப தமது கண்களுக்கு முன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறை இருந்தது போன்று தொழட்டும்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் யமன் நாட்டில் பைத்துல் மாலின் செல்வத்தால் வாணிபம் செய்தார்கள். அதன்

மூலமாக வந்த இலாபத்தில் தமது கடனை செலுத்தினார்கள். அல்லாஹ்வின் செல்வத்தால் வாணிபம் புரிந்த முதல் நபர் அவர்கள்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதியுடன் அன்பளிப்பும் பெற்று வந்தார்கள். எதுவரையெனில் அவர்களிடம் முப்பது கால்நடைகள் சேர்ந்து விட்டன.

(சீரதுஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 505 முஆஸ் பின் ஜபல் (ரலி) – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 1404 முஆஸ் பின் ஜபல் – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய அனுமதி கண்டிப்பாகக் கடனை திருப்பிச் செலுத்துவதற்காக வழங்கப்பட்டது. வாணிபம் எந்த அளவு வரை இருந்ததென்றால், கிடைத்த இலாபத்தில் சிறிது கடனை அடைத்து வந்தார்கள். இலாபம் எடுக்காமலிருந்தார்கள் என்றாலும், வாணிபத்தில் கிடைத்த இலாபத்திலிருந்து தமது பணிக்கான ஊதியமாக எடுத்திருக்கலாம். நான் இவ்வாறு செலவு செய்தேன்; இது எனது ஆலோசனையாக இருந்தது. என்னுடைய உழைப்பு இருந்தது. எனவே இது அதற்குரிய கூலியாகும் என்ற வகையில் அன்னாார் எடுத்திருப்பார்கள்.

இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கியிருந்தார்கள். கடன் அடைவதற்காக அன்னார் எடுத்துக் கொண்டார்கள். இதுவே ஏற்றுக் கொள்ளத்தக்க விஷயமாகத் தென்படுகிறது. இலாபத்தின் விகிதத்திலிருந்து ஊதியம் எடுத்திருப்பார்கள். அல்லது ஓரளவு இலாபத்தை எடுத்திருப்பார்கள். எவ்வாறிருந்தாலும் அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதியுடனே நடந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் ஹஜ் செய்ய வந்தபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைச் சந்தித்தார்கள். அன்னாரை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஜ்ஜுக்குப் பொறுப்பாளராக நியமித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களும் தர்விய்யா நாளன்று சந்தித்துக் கொண்டார்கள். இருவரும் கட்டித்தழுவினார்கள். பிறகு பரஸ்பரம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் (வஃபாத்தின்) இரங்கலை தெரிவித்துக் கொண்டார்கள். பிறகு இருவரும் தரையில் அமர்ந்து உரையாடினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி சஅது தொகுதி 3 பக்கம் 441 முஆஸ் பின் ஜபல்... – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல் இஸ்திஆபில் எழுதப்பட்டுள்ளது. இதுவும் ஒரு வரலாற்று நூலாகும். ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் மிகவும் வள்ளலாக இருந்தார்கள். இந்த வள்ளல்தன்மை மற்றும் தாராளமனப்பான்மையின் காரணமாகவே அவர்களின் சொத்துக்கள் அனைத்தும் கடனில் செல்லும் நிலை ஏற்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று கடன் கொடுத்தவர்களிடம் தமது கடனை மன்னிக்கக் கூறுமாறு வேண்டினார்கள். இது முன்னரும் கூறப்பட்டுள்ளது. பல்வேறு ஆதாரங்கள் மூலமாக வேறொரு விஷயம் அல்லது அதே விஷயம் கூறப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடன் கொடுத்தவர்களிடம் கூறினார்கள். ஆனால் அவர்கள் கடனை மன்னிக்க மறுத்து விட்டார்கள். இதை அவர் அடுத்து எழுதியுள்ளார், யாராவது யாருக்காகவாவது யாருடைய கடனையாவது மன்னித்திருந்தால், அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக மன்னித்திருப்பார்கள். எனவே அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக, ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களின் கடனை மன்னித்திருப்பார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து உயர்வாக இருந்தது. அவர்களுக்காகவே யாராவது தனது கடனை மன்னித்திருக்க முடியும். அல்லது பொருள் தியாகம் செய்திருக்க முடியும். ஆனால் அவர்களிலும் பலர், ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று சிலர் மன்னிக்கவில்லை; அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் கடனைத் திரும்ப பெறுவோம் என்றே கூறினர்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறகு கடனை செலுத்துவதற்காக ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களின் எல்லா சொத்துகளையும் விற்று விட்டார்கள். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களின் கரம் வெறுமையாகி விட்டது. மக்கா வெற்றி பெற்ற வருடத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களை யமன் நாட்டின் ஒரு பகுதிக்கு அமீராக நியமித்து அனுப்பினார்கள்.

இங்கு விஷயம் இன்னும் தெளிவாகி விடுகிறது. அமீராக்கி அனுப்பியிருந்தார்கள். எனவே அமீர் என்ற வகையில் அவர்களுக்குக் கிடைத்து வந்த அன்பளிப்பு முதலியவைத் தொடர்பாக அது பைத்துல் மாலுக்கு என்றே கருதப்பட்டு வந்தது. அல்லாஹ்வின் செல்வத்தில் வாணிபம் செய்த முதல் நபர் அவர்கள்தான். அதாவது பைத்துல் மாலின் செல்வத்தில் வாணிபம் செய்தவர் அன்னார் ஆவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வஃபாத் வரை அவர்கள் அங்கு இருந்தார்கள். வளம் பெற்று விட்டார்கள். அந்த காலகட்டத்தில் வாணிபத்தில் அவர்களுக்கு பலன் கிடைத்து வந்தது. பிறகு அவர்கள் திரும்பி வந்தபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: அந்த நபரை அதாவது, ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களை வரவழையுங்கள். அவரிடமிருந்து அவருக்குத் தேவையான பொருட்களை விட்டு விட்டு மற்றதைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடனை அடைப்பதற்காக அனுமதி வழங்கினார்கள். இப்பொழுது கடன் அடைபட்டு விட்டது.

ஒரு மனிதரின் தேவைக்கான பொருட்களும் அவரிடம் இருக்க வேண்டும். ஆனால் செல்வச் செழிப்பு கூடாது. எனவே இந்தச் செல்வத்தை விட்டு விட்டு மற்றதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கருதினார்கள். இப்பொழுது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இந்த விவகாரம் வந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அளவு கடந்த நேசம் இருந்தது. (அதன் காரணமாக) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு விஷயத்திற்கு அனுமதியளித்திருக்கும்போது, தான் அதற்கு மாற்றமாகத் தீர்மானிப்பதை அன்னாரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்வோர் (இதனை நினைவில் கொள்வார்களாக). நாம் எவரின் மீதும் அவருடைய தகுதிக்கு அப்பாற்பட்ட பொறுப்பைச் சுமத்துவதில்லை. அவர்கள் சுவர்க்கத்திற்குரியவராவர்; அதில் என்றென்றும் வாழ்ந்து வருவர். (7:43)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

அனுப்பினார்கள். மேலும் நான் அவரிடமிருந்து எதனையும் பெற மாட்டேன் என்று கூறினார்கள். நீர் வாணிபம் செய்யலாம். சிறிது பங்கை எடுத்துக் கொள்ளலாம் என்று கூறி அனுப்பினார்கள். அவராக எனக்குத் தராதவரை நான் அதிலிருந்தும் எதையும் பெற மாட்டேன். நான் கேட்கப்போவதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க இவர் சென்றார். அனுமதியுடனே எந்த ஓர் அன்பளிபையும், மற்றப் பொருட்களையும் பெற்றுக் கொண்டார். அவர் தாமாகவே கொடுத்தால் தவிர நானாகக் கேட்கப்போவதில்லை என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் சில சட்ட திட்டங்களை உறுதியாக பேணக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். அவர்களிடம் நடந்ததைக் கூறினார்கள். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனது தேவையை நிறைவேறுவதற்காகவே என்னை அங்கு அனுப்பினார்கள். நான் எதுவும் கொடுக்க மாட்டேன்.

அறிவிப்புகளிலிருந்தும் அவர்களின் முழு வாழ்க்கை வரலாற்றிலிருந்தும் இந்த விஷயமும் நிரூபணமாகிறது. அதாவது அவர்களிடம் செல்வச் செழிப்பு இருந்ததென்றால், சில நாட்களுக்கு இருந்திருக்கும். ஏனெனில் பெரும்பாலும் அவர்கள் மக்கள் மத்தியில் விநியோகித்து வந்தார்கள். அடுத்து சில அறிவிப்புகள் வரும். அவற்றின் மூலம் அவர்கள் எவ்வாறு விநியோகித்து வந்தார்கள் என்பது தெரியும்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சென்று கூறினார்கள்: நான் நீங்கள் சொன்னதை ஏற்கிறேன். முதலில் நான் எதுவும் கொடுக்க மாட்டேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு பதிலளித்து இருந்தார்கள். சில காலத்திற்குப் பிறகு அல்லது சிறிது நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சென்று, சரி நான் நீங்கள் சொன்னதை ஏற்கிறேன். நீங்கள் சொன்ன விஷயத்தையே நான் செய்வேன். ஏனென்றால், நான் கனவில் பார்த்தேன்! (சில காலங்களுக்குப் பிறகே சென்றிருப்பார்கள். ஏனென்றால் இந்தக் கனவைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.)

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் தண்ணீரில் மூழ்குவதாகக் கனவில் காண்கிறேன். நீங்கள் அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னைக் காப்பாற்றினீர்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். எல்லா விஷயத்தையும் அவர்களுக்கும் கூறினார்கள். நான் உங்களிடம் எதையும் மறைக்க மாட்டேன் என்று ஆணையிட்டுக் கூறினார்கள். நான் என்ன எடுத்தேனோ, எவ்வாறு எடுத்தேனோ எல்லாம் எனக்கு முன்னால் இருக்கிறது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் உங்களிடமிருந்து எதையும் பெற மாட்டேன். சரி! நீங்கள் எல்லா கணக்கு வழங்குகளையும் எனக்குக் கூறி விட்டீர்கள். ஆனால் நான் எதுவும் வாங்க மாட்டேன். நான் அந்த அனைத்து அன்பளிப்புகளையும் உங்களுக்கு பரிசாகக் கொடுத்து விட்டேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இது சிறந்த தீர்வாகும்.

(அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 461 முஆஸ் பின் ஜபல்... – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் உடனிருந்தார்கள். அவர்களுக்கு இந்த விஷயம் தெரிய வந்தபோது, ஆம்! இப்பொழுது காலத்தின் கலீஃபா தீர்மானித்து விட்டார்கள். என்ன இருக்கிறதோ அதை சுயமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களுக்கு கொடுக்கிறார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இது சரி! முழுமையான கட்டுப்படுதலுடன் அதை ஏற்றுக் கொண்டார்கள். ஏன் (செல்வம்) எடுக்கப்படுகிறது என்பது அவர்களுக்குத் தேவையில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு இது காலத்தின் கலீஃபாவின் தீர்மானமாக இருக்க வேண்டும் என்றுதான் அவர்களுக்கு (எண்ணம்) இருந்தது. அவர்கள் செலவு செய்யலாமா? கூடாதா? அல்லது தம்மிடம் செல்வத்தை வைத்துக் கொள்ளலாமா? கூடாதா?

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தீர்மானித்து விட்ட பிறகு முதலில், வாங்க வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுத்தம் கொடுத்து வந்தார்கள். ஆனால் நான் வாங்க மாட்டேன். நான் அன்பளிப்பாகத் தருகிறேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் எந்தக் காரணமும் இருக்கவில்லை. சரி! இந்தத் தீர்ப்பு இந்த அனைத்து விவகாரங்களுக்கும் சிறந்த தீர்வாகும் என்று அமைதியாக கூறினார்கள்.

இங்கு மேலும் விளக்கம் கிடைத்து விட்டது. அதாவது ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களின் தேவை பூர்த்தியாகாத காலம் வரை அல்லாஹ்வும் அவர்களுக்கு அதன் பால் கவனமூட்டவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் வஃபாத் ஆன பிறகு, ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களின் தேவையும் நிறைவேறிவிட்ட பிறகு, செல்வச் செழிப்பும் ஏற்பட்டு விட்ட பிறகு, கனவின் மூலமாக அல்லாஹ் தானே ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களுக்கு இந்த விஷயத்தின் பால் கவனமூட்டி விட்டான். இப்பொழுது (எடுத்துக் கொள்ளக்) கூடாதா என்பதல்ல. இப்பொழுது உனது சொத்தைக் கொண்டே வாழ்வைக் கழி. இப்பொழுது அமீர் என்ற முறையில் அந்த அன்பளிப்பையும் நீ பெற முடியாது. பைத்துல் மாலிலிருந்து நீ செலவும் செய்ய முடியாது. இதற்குப் பிறகு அவர்கள் நீண்ட காலம் அங்கு இருக்கவுமில்லை. எவ்வாறிருப்பினும் இதுவே அதன் சுருக்கமான விளக்கம்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களை யமன் நாட்டிற்கு அனுப்பியபோது, உங்கள் முன் விவகாரம் ஏதும் வந்தால் நீங்கள் எவ்வாறு தீர்ப்பளிப்பீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், நான் அல்லாஹ்வின் மறையிலிருந்து தீர்ப்பளிப்பேன் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் மறையில் அதற்கான கட்டளை கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் நடைமுறைக்கேற்ப தீர்ப்பளிப்பேன் என்று கூறினார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் தூதரின் நடைமுறையிலும் அதற்கான

## திருக்குர்ஆனிலிருந்து...

(அநீதி இழைத்த) அவர்கள், அல்லாஹ்வின் பாதையை விட்டு (மக்களை)த் தடுத்து மேலும் அதில் கோணலைத் தேடிக் கொண்டிருந்தனர். மேலும் அவர்கள் மறுமையை மறுப்போராக இருந்தனர். (7:46)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

கட்டளைக் கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், பிறகு நான் எனது மார்க்க அறிவால் முயற்சித்து எனது கருத்தை நிலைநாட்டுவேன். நான் அதில் எந்த அலட்சியமும் காட்ட மாட்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இந்த விஷயங்களைக் கேட்டு விட்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது நெஞ்சில் தட்டினார்கள். பிறகு கூறினார்கள்: புகழ்கள் அல்லாஹ்வுக்கே உரியன. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் தனது தூதரின் தூதுவருக்கு இத்தகைய விஷயத்துக்கு நல்வாய்ப்பு தந்தான். அது அவனது தூதரின் விருப்பத்திற்குக் காரணமாக அமைந்தது.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 347 ஹதீஸ் எண் 22357 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களை யமன் நாட்டுக்கு அனுப்பியபோது கூறினார்கள்: ஆடம்பர வாழ்க்கை வாழ்வதிலிருந்து தவிர்ந்திருங்கள். ஏனெனில், அல்லாஹ்வின் அடியார்கள் ஆடம்பர வாழ்வை மேற்கொள்வதில்லை.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 375 ஹதீஸ் எண் 22456 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

இதன் மூலமாக மேலும் இந்த விஷயமும் தெளிவாகி விட்டது. அன்பளிப்புகளும், வாணிபம் செய்து வந்த செல்வமும் கடன்களை அடைப்பதற்காக இருந்தன. இவர்களின் கைகள் தாராளமானவை; ஏழைகளுக்கு உதவுபவர்; அதிலேயே செலவிடுவார்கள் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் பிறகும் கூட இவ்வாறு அறிவுரை கூறி விட்டார்கள்: நீங்கள் ஆரம்பர வாழ்வை வாழ்வதற்காக அல்ல; மாறாக, உங்கள் தேவைகள் பூர்த்தியாவதற்காக இந்த அனைத்து அனுமதிகளையும் நான் உங்களுக்குத் தருகிறேன். அதிலிருந்து (ஆரம்பர வாழ்வை மேற்கொள்வதிலிருந்து) தவிர்ந்திருக்குமாறு வலியுறுத்தினார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: யமன் நாட்டை நோக்கி பயணமாவதற்காக நான் எனது விலங்கின் மீது காலை வைத்தபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்களுடன் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ளுங்கள். மக்களுடன் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ளங்கள் என்ற இந்தக் கடைசி அறிவுரையை எனக்கு வழங்கினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅத் தொகுதி 3 பக்கம் 439 முஆஸ் பின் ஜபல்... – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்றைய காலத்து முஸ்லிம்களின் நிலையைப் பாருங்கள். இவ்வாறா நடந்து கொள்கிறார்கள்? மீலாதுன் நபி கொண்டாடுகிறார்கள். மீலாதுன் நபி கொண்டாடுவதற்கான சரியான விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரிகள் மற்றும் அவர்களின் அறிவுரைகளின்படி செயல்பட வேண்டும்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யமன் நாட்டுக்கு ஆட்சியாளராக்கி அனுப்பியபோது அவர்களின் அந்தஸ்தை இந்தச் சொற்களில் எடுத்துரைத்தார்கள்:

إِنِّي بَعَثْتُ لَكُمْ خَيْرَ أَهْلِي அதாவது நான் எனது மக்களில் சிறந்தவரை உங்களுக்கு அனுப்புகிறேன்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 502 முஆஸ் பின் ஜபல் (ரலி) – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

இப்னு أَبُو نَجِيح அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களை யமன் நாட்டுக்கு ஆட்சியாளராக்கி அனுப்பினார்கள். மேலும் நிச்சயமாக நான் உங்கள் மீது எனது மக்களில் சிறந்தவரை, அறிவுடையவரை மற்றும் மார்க்கமுள்ளவரை ஆட்சியாளராக்கியுள்ளேன் என்று யமன் நாட்டு மக்களுக்கு எழுதினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி சஅத் தொகுதி 3 பக்கம் 438,439 முஆஸ் பின் ஜபல்... – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஒரு நபிமொழியில் வருகிறது. அறிவிப்பு இதுவாகும். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இது முஸ்லிம் அஹ்மத் பின் ஹம்பலின் அறிவிப்பாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்குப் பத்து விஷயங்களை வலியுறுத்தியவாறு கூறினார்கள்:

முதல் விஷயம் என்னவென்றால், அல்லாஹ்வோடு யாரையும் இணை வைக்காதீர்கள். நீங்கள் கொல்லப்பட்டாலும் சரி! எரிக்கப்பட்டாலும் சரி! இரண்டாவது விஷயம் என்னவென்றால்,பெற்றோருக்குக் கட்டுப்படாமல் இருக்கக்கூடாது. என்ன ஆனாலும் சரி! அவர்களிடமிருந்து எதுவும் கிடைக்காவிட்டாலும் சரி! பிறகு மூன்றாவது இந்த விஷயத்தைக் கூறினார்கள்: கடமையான தொழுகைகளை வேண்டுமென்றே விடாதீர்கள். ஏனெனில் வேண்டுமென்றே கடமையான தொழுகைகளை விடுபவர் அல்லாஹ்வின் பொறுப்பிலிருந்து பாதுகாப்பிலிருந்தும் வெளியேறி விடுவார்.

பிறகு கூறினார்கள்: மது அருந்தாதீர்கள். மது எல்லா வெட்கக்கேடுகளின் வேறாகும். பிறகு கூறினார்கள்: பாவம் மற்றும் கட்டுப்படாமையிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பாவத்தின் காரணமாக இறைவனின் கோபம் இறங்குகிறது. பிறகு கூறினார்கள்: பகைவரை நேருக்கு நேர் சந்திக்கும் தருணத்தில் ஓடி விடாதீர்கள். பகைவரை எதிர்நோக்க வேண்டி வந்தால் பிறகு பயந்து ஓடக்கூடாது. மக்கள் அழிந்தாலும் சரி!

பிறகு கூறினார்கள்: மக்கள் பிளேக்கைப் போன்ற கொள்ளை நோய்க்கு இரையாகி விட்டால், நீங்கள் அவர்களுக்கு மத்தியில் இருந்தால் உங்கள் இடத்திலேயே இருங்கள். பிளேக் நோய் பரவுகிறது என்றால் இதுபோன்ற எந்தவொரு கொள்ளை நோய் பரவினாலும், விசாலமாகப் பரவக் கூடியது எனில் நீங்கள் நோய் பகுதியில் இருந்தால் எங்கு இருக்கின்றீர்களோ அங்கேயே இருங்கள்.

பிறகு கூறினார்கள்: உங்கள் மனைவி மக்கள் மீது உங்களது சக்திக்கேற்ப செலவு செய்யுங்கள். எவ்வளவு ஆற்றல் இருக்கிறதோ அவ்வளவு அவர்கள் மீது செலவழியுங்கள். அவர்களின் உரிமையை

**திருக்குர்ஆனிலிருந்து...**

(சுவர்க்கத்திற்குரிய) அவர்களின் பார்வைகள் நரகத்திற்குரியவர்களின் பக்கம் திருப்பப்படும்போது, அவர்கள் எங்கள் இறைவா! எங்களை அநீதி இழைக்கும் சமுதாயத்தினரைச் சார்ந்தவர்களாக ஆக்கி விடாதிருப்பாயாக என்று கூறுவர். (7:48)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

நிறைவேற்றுங்கள். அவர்களுக்கு பண்பு கற்பிப்பதிலும் தர்பிய்யத் வழங்குவதிலும் அலட்சியம் காட்டாதீர்கள். பிறகு சரியான முறையில் அவர்களுக்குத் தர்பிய்யத் கொடுங்கள். சில விஷயங்களில் சிறிது கடினம் மேற்கொள்ள வேண்டி வந்தால் அதையும் செய்யுங்கள். இவ்வாறு அவர்களுக்குச் சரியான தர்பிய்யத் கிடைக்கட்டும். அவர்களுக்கு இறைவனைப் பற்றிய அச்சத்தை நினைவூட்டி வாருங்கள். இந்தப் பத்து விஷயத்தை அன்னார் அவர்களுக்குக் கூறினார்கள்.

(முஹ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 366 முஸ்னத் முஆஸ் பின் ஜபல் ஹதீஸ் எண் 22425 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: முஆஸே! நான் உமக்கு பரிவுள்ள சகோதரர் அறிவுரை வழங்குவது போன்று அறிவுரை வழங்குகிறேன். இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள் என்று அறிவுரை கூறுகிறேன். இது இப்னு உமர் (ரலி) அவர்களின் அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் உமக்கு இறையச்சத்தை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறேன். நான் உமக்கு இறையச்சத்தை மேற்கொள்ள (மட்டும்) அறிவுறுத்தவில்லை. நோயாளிகளை நலம் விசாரிக்குமாறு அறிவுறுத்துகிறேன். விதவைகள் மற்றும் பலவீனமானவர்களின் தேவைகளை நிறைவேற்றுமாறு அறிவுறுத்துகிறேன். தேவையுடையவர்கள் மற்றும் வறியவர்களுடன் அமர்வதற்கும், மக்களுக்கு உங்கள் சார்பாக நியாயத்தை வழங்குவதற்கும், உண்மையை பேசுவதற்கும், மேலும் அல்லாஹ்வின் விவகாரத்தில் எந்தக் குற்றஞ்சாட்டக்கூடியவரின குற்றஞ்சாட்டுதலும் உங்களுக்கு தடையாக வர வேண்டாம். இந்த விஷயத்துக்கு உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 15 பக்கம் 903 ஹதீஸ் எண் 43555... – 1985 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு முறை தமது தோழர்களிடம் எதற்காகவாவது ஆசைப்படுங்கள் என்று கூறினார்கள். இந்த வீடு தங்கத்தால் நிரம்பிவிட வேண்டும். நான் அதை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்ய வேண்டும். சதக்கா கொடுத்து விட வேண்டும் என்பது எனது ஆசை என்று ஒருவர் கூறினார்.

மேலும் ஒருவர் கூறினார்: இந்த வீடு வைரங்களால் நிரம்பி விட வேண்டும். நான் அதை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்ய வேண்டும். சதக்கா கொடுக்க வேண்டும் என்பது எனது ஆசை. எத்தகைய விநோதமான மகத்துவமிக்க ஆசைகள் சஹாபாக்களுக்கு இருந்தன.

பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இன்னும் ஆசைப்படுங்கள். அவர்கள் கூறினர்: அமீருல் மூஃமினீன் அவர்களே! நாங்கள் என்ன ஆசைப்படட்டும் என்று எங்களுக்கு புரியவில்லை. அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனது ஆசை என்னவென்றால், இந்த வீடு ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி), ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி), அபூ ஹுஸைஃபாவின் அடிமை சாலிம் (ரலி) மற்றும் அபூ ஹுஸைஃபா பின் யமான் (ரலி) போன்ற மக்களால் நிரம்பியிருக்க வேண்டும்.

(அல்முஸ்தத்ரக் அலஸ் சஹ்யைன் தொகுதி 3 பக்கம் 252 ஹதீஸ் எண் 5005 கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சென்ற முறையும் இதை எடுத்துக் கூறினேன். இம்முறை ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களின் நற்குறிப்பிலும் இது வந்துவிட்டது.

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 9 லிருந்து11 வரை இரண்டு வருடங்கள் யமன் நாட்டில் இருந்தார்கள்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 505 முஆஸ் பின் ஜபல் (ரலி) – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஒரு முறை ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஒரு பையில் 400 தீனார்கள் போட்டு, ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களிடம் எடுத்துச் செல்லுமாறு அடிமையிடம் கூறினார்கள். இது கடந்த குத்பாவில் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களின் நற்குறிப்பிலும் எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் அதன் மீது விளக்கம் எஞ்சிவிட்டது. எனவே முழு விளக்கத்தையும் இப்பொழுது எடுத்துரைத்து விடுகிறேன்.

அவர்கள் வீட்டில் சிறிது நேரம் இருப்பீராக. அவர்கள் இந்தப் பணத்தை என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பீராக என்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆக அடிமை பையை வாங்கிக் கொண்டு அவர்களிடம் சென்றார். அவர் கூறினார்: அமீருல் மூஃமினீன் அவர்கள் உங்களுக்கு இந்த பணத்தை உங்கள் தேவைகளுக்காகப் பயன்படுத்துமாறு கூறினார்கள்.

அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அவர்கள் மீது கருணை புரிவானாக. பிறகு அவர்கள் தமது அடிமைப் பெண்ணை அழைத்தார்கள். இந்த 7 தீனார்கள் இன்னாரிடம் கொண்டு செல், இந்த 5 தீனார் இன்னாரிடம் கொண்டு செல், இந்த 5 தீனார் இன்னாரிடம் கொண்டு செல் என்று கூறினார்கள். எதுவரை எனில் அவர்கள் அனைத்தையும் காலியாக்கி விட்டார்கள்.

பல்வேறு வீடுகளுக்கு கொடுத்து அனுப்புவதற்காக தமது பணிப்பெண்ணை அழைத்துக் கூறினார்கள்: சென்று இன்ன இன்ன வீடுகளுக்கு இதைக் கொடுத்து வா என்று கூறினார்கள்.

ஏழை வீடாக இருக்கும். பிறகு அந்த அடிமை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் திரும்பி வந்து அனைத்தையும் கூறினார்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதே அளவு தீனார் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களுக்காகவும் தயாராக வைத்திருந்தார்கள். எவ்வளவு ஹஸ்ரத் உபூ உபைதாவுக்கு அனுப்பினார்களோ அதே அளவு ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களுக்காகத் தயார் செய்து வைத்திருந்தார்கள். இரண்டாவது பையை தாயர் செய்து வைத்திருந்தார்கள். அவர்கள் அடிமையிடம் கூறினார்கள்: இதை ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களிடம் எடுத்துச் செல். மேலும் அவர்கள் வீட்டில் சிறிது நேரம் இருந்து அவர்கள் அதை என்ன செய்கிறார்கள் என்று பார்.

ஆக அந்த அடிமை பையை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களிடம் சென்றார். அவர்களிடம், அமீருல் மூஃமினீன் அவர்கள் இதைத் தங்கள் தேவைக்காகப் பயன்படுத்துமாறு கூறினார்கள் என்றார். ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அவர்கள் மீது கருணை புரிவானாக. பிறகு அவர்கள் அந்த பணிப்பெண்ணை அழைத்துக் கூறினார்கள்: இவ்வளவு தீனார் இன்னார் வீட்டுக்குக் கொண்டு செல். இவ்வளவு தீனார் இன்னார் வீட்டுக்குக் கொண்டு செல். இவ்வளவு நேரத்தில் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களின் மனைவியும் வந்து விட்டார்கள்.

அவர்கள் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! நாமும் வறியோர்கள்தான். அதாவது வீட்டிலும் ஒன்றுமில்லை. வீட்டுக்காகவும் ஏதாவது வைத்துக் கொள்ளுங்கள். (இதற்கு முன்னர் இலாபம் சம்பாதித்தது மற்றும் அன்பளிப்பு பெறுவது பற்றிய விஷயங்கள் வந்தன. அவையும் மேற்கொண்டு தெளிவாகின்றன).

நமது வீட்டிலும் ஒன்றுமில்லை. நாமும் வறியோர்கள் ஆவோம். எங்களுக்கும் தாருங்கள். அப்பொழுது பையில் இரண்டு தீனார்கள் மட்டும் எஞ்சியிருந்தன. அனைத்தையும் அவர்கள் விநியோகித்து விட்டிருந்தார்கள். ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் அவ்விரு தீனார்களையும் மனைவி பக்கம் தூக்கிப் போட்டு விட்டார்கள். அடிமை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்து அவர்களுக்கு அனைத்து விஷயங்களையும் தெரிவித்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

மேலும் அன்னார் கூறினார்கள்: நிச்சயமாக! ஹஸ்ரத் அபூ உபைதா மற்றும் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) ஆகிய இவர்கள் இருவரும் பரஸ்பரம் சகோதரர்களாவர்.

(மஜ்மவுஸ் ஸவாஹித் தொகுதி 3 பக்கம் 234 கிதாபுஸ் ஸக்காத் பாப் ஃபில் இன்ஃபாக் – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஷுரைஹ் பின் உபைது மற்றும் ராஷித் பின் சஅத் ஆகியோர் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் சரக் எனும் இடத்தை அடைந்தபோது, சரக் என்பது தபூக் பகுதியில் உள்ள ஒரு ஊரின் பெயராகும். சிரியாவில் கடுமையான கொள்ளை நோய் பரவியிருப்பதாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குக் கூறப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: சிரியாவில் கடுமையான கொள்ளை நோய் பரவியிருப்பதாக எனக்கு தகவல் கிடைத்துள்ளது.

எனது கருத்து என்னவென்றால், எனது மரணத்தருவாய் நெருங்கி, ஹஸ்ரத் உபூ உபைதா பின் ஜர்ராய் (ரலி) அவர்கள் உயிருடன் இருந்தால் நான் அவர்களை எனது கலீஃபாவாகத் தேர்ந்தெடுத்து விடுவேன். அல்லாஹ் என்னிடம் அவர்கள் தொடர்பாக, நீ அவரை ஏன் முஹம்மதிய உம்மத்துக்குக் கலீஃபாவாக நியமித்தாய்? என்று கேட்டால், நான் கூறுவேன்! நான் உனது தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக்கேட்டிருக்கிறேன். அதாவது ஒவ்வொரு நபிக்கும் ஒரு நம்பிக்கைக்குரியவர் இருப்பார். எனது (அமீன்) நம்பிக்கைக்குரியவர் அபூ உபைதா பின் ஜர்ராஹ் ஆவார்கள்.

இது முன்னரும் கூறப்பட்டு விட்டது. மக்களுக்கு இது நன்றாகப்படவில்லை. அவர்கள் கேட்டனர்: குரைஷிகளின் பெரிய மக்கள் அதாவது பனூ ஃபஹ்ர் நிலை என்னவாகும் என்று கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், எனது மரணத் தருவாய் நெருங்கி, அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களும் மரணித்திருந்தால், ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களை எனது கலீஃபாவாக நியமித்து விடுவேன். எனது கண்ணியத்திற்குரிய மேன்மை மிகுந்த இறைவன் என்னிடம், நீ அவரை ஏன் கலீஃபாவாக நியமித்தாய்? என்று கேட்டால், நான் கூறுவேன்: நான் உனது தூதர் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன். அதாவது அவர்கள் கியாமத் நாளன்று அறிஞர்களில் முன்னால் கொண்டு வரப்படுவார்கள்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல், முஸ்னத் குலஃபாயே ராஷிதீன், முஸ்னத் உமர் பின் கத்தாப் தொகுதி 1 பக்கம் 109 ஹதீஸ் எண் 108 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 239)

இது அறிவில் அவர்களின் உயர் தகுதியாக இருக்கும்.

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களும் ஹிஜ்ரி 15ல் யர்மூக் போரில் மைம்னா அதாவது படையின் ஒரு பகுதி, அதில் போரின்போது தளபதி வலதுபுறம் நிற்பார்; அதன் ஒரு பகுதியின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். கிறித்தவர்களின் தாக்குதல் எந்த அளவு கடுமையாக இருந்ததென்றால், முஸ்லிம்களின் அந்தப் படையைப் பிரிவு படையிலிருந்து பிரிந்து தனியாகி மக்கள் சிதறுண்டு போயினர். ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் இந்த நிலையைப் பார்த்தபோது மிகவும் வீரத்தையும், உறுதித்தன்மையையும் வெளிப்படுத்தினார்கள். குதிரையை விட்டு கீழே இறங்கி விட்டார்கள். நான் இப்பொழுது நடந்தே சண்டையிடுவேன். யாராவது ஒரு வீரர் இந்த குதிரையின் உரிமையை நிறைவேற்ற முடியும் என்றால் இதோ குதிரை இருக்கிறது என்று கூறினார்கள்.

அவர்களின் மகன்களும் போர்க்களத்தில் இருந்தனர். அவர்கள் கூறினார்கள்: நான் அதன் உரிமையை நிறைவேற்றுவேன். ஏனெனில் என்னால் பயணித்து நன்றாக சண்டையிட முடியும். ஆக, தந்தை மகன் இருவரும் ரோமானியர்களின் படையைக் கிழித்தவாறு உள்ளே நுழைந்து விட்டார்கள். எவ்வளவு தைரியமாகப் போரிட்டார்கள் என்றால் தடுமாறிய முஸ்லிம்களின் பாதங்கள் சுதாரித்துக் கொண்டன.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 508 முஆஸ் பின் ஜபல் (ரலி) – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & ஃபிரோஸுல் லுகாத் பக்கம் 1332)

அதே அச்சத்தின் நிலைமையாக இருந்தது (மாறி) அவர்கள் மீண்டும் அம்மக்களைத் தோற்கடித்து முஸ்லிம்களுக்கு வெற்றியை பெற்றுத் தந்து விட்டனர்.

அபூ இத்ரீஸ் ஹவ்லானீ அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் சிரியாவில் தமஸ்கஸின் பள்ளியில் நுழைந்தபோது அங்கு மின்னும் பற்களுடைய ஓர் இளைஞர் இருந்தார். அவரைச் சுற்றி மக்கள் ஒன்று கூடியிருந்தனர். மக்களுக்கு ஏதாவதொரு விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அவர்கள் அவரிடம் விவகாரத்தைக் கொண்டு செல்வர். அவருடைய கருத்துக்கு முன்னுரிமை வழங்குவர். நான் அவர் தொடர்பாகக் கேட்டபோது, இவர் முஆஸ் பின் ஜபல் என்று கூறப்பட்டது. அடுத்த நாள் நான் மதிய வேளையில் சென்றேன். அவர் எனக்கு முன்பாக மதிய வேளையில் அங்கு இருக்கக் கண்டேன். அவர்கள் தொழுது கொண்டிருப்பதை நான் பார்த்தேன். நான் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன்.

அவர்கள் தொழுது முடித்த பிறகு நான் அவர்களுக்கு முன்னால் சென்று அவர்களுக்கு சலாம் கூறினேன். நான் அவர்களிடம், அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு அல்லாஹ்வுக்காக உங்கள் மீது நேசம் இருக்கிறது என்று கூறினேன். ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாகவா? என்று கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்று கூறினேன். மீண்டும் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாகவா? என்று கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் மீது ஆணையாக என்று கூறினேன். மீண்டும் அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாகவா? என்று கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்று கூறினேன்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் உங்கள் இறைவனைப் பணிவாகவும், மறைமுகமாகவும் அழையுங்கள். நிச்சயமாக அவன் எல்லை மீறி நடப்பவர்களை நேசிப்பதில்லை. (7:56)

A.Basheer Ahmad, Sec.Waqf-e-jadid & Naib Sec. Maal, Melapalayam

பிறகு அவர்கள் எனது போர்வையின் விளிம்பைப் பிடித்து என்னை தன் பக்கம் இழுத்தார்கள். மேலும் கூறினார்கள்: மிகிழ்ச்சியடைந்து விடு. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக்கேட்டேன்: அதாவது கண்ணியத்திற்குரிய மேன்மை மிகுந்த அல்லாஹ் இவ்வாறு கூறினான். எனக்காக ஒருவர் மற்றவரை நேசிப்பவர்கள், எனக்காக ஒருவர் மற்றவருடன் அமரக் கூடியவர்கள், எனக்காக ஒருவர் மற்றவரைச் சந்திக்கக் கூடியவர்கள் மற்றும் எனக்காக ஒருவர் மற்றவர் மீது செலவு செய்பவர்கள் ஆகியோருக்காக எனது அன்பு கடமையாகி விட்டது. அதாவது அல்லாஹ் கொள்ளும் அன்பு கடமையாகி விட்டது.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் முஸ்னத் முஆஸ் பின் ஜபல் (ரலி) தொகுதி 7 பக்கம் 253,354 ஹதீஸ் எண் 22380 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களுக்கு 2 மனைவிகள் இருந்ததாக ஓர் அறிவிப்பில் வருகிறது. முறைக்கேற்ப ஒருவரிடம் இருக்கும்போது மற்றவரிடம் தண்ணீரைக் கூட பருக மாட்டார்கள். இவ்வாறு நீதி இருந்தது.

மற்றோர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். என்று ஒருவரின் இல்லத்தில் முறை இருக்குமோ அன்று மற்றவர் இல்லத்தில் உளூ கூட செய்ய மாட்டார்கள். பிறகு இருவரும் சிரியா நாட்டில் கொள்ளை நோயில் மரணித்து விட்டனர். அவர்கள் இருவரையும் ஒரே கபரில் அடக்கம் செய்யப்பட்டது. அடக்கப்படும்போது யாரை முதலில் அடக்கம் செய்வது என்று ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் சீட்டு குலுக்கிப் போட்டார்கள். இது அவர்களின் நீதியாக இருந்தது.

(முஹம்மத் அஸ்கர் மகல் அவர்கள் மொழியாக்கம் செய்த ஹுல்யத்துல் அவ்லியா என்ற நூல், தொகுதி 1 பாகம் 1 பக்கம் 204 – 2006 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

சீரத்துஸ் சஹாபா என்ற நூலில் இன்னோர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களுக்கு 2 மனைவிமார்கள் இருந்தனர். அவர்கள் இருவரும் அம்வாஸ் எனப்படும் பிளேக் வகை கொள்ளை நோயால் மரணித்து விட்டனர். அதாவது அந்தக் காலத்தில் பிளேக் நோயின் அந்த வகைப் பரவியிருந்தது. ஒரு மகனைப் பற்றி தெரிய வருகிறது. அவருடைய பெயர் அப்துர் ரஹ்மான் என்று கூறப்பட்டுள்ளது. அவர் யர்மூக் போரில் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களுடன் கலந்து கொண்டார். அவரது வஃபாத்தும் அமவாஸ் எனும் பிளேக் நோயால் ஏற்பட்டது.

(சீரதுஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 510,511 ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் அமவாஸ் எனும் பிளேக் நோயால் மரணித்தபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களை சிரியாவுக்கு பொறுப்பாளராக நியமித்தார்கள். அமவாஸ் என்பது ஒரு ஊரின் பெயராகும். இதை முன்னரும் கூறியிருக்கிறேன். அதன் விவரம் இதுவாகும்: அது ரமலாவிலிருந்து 7 மைல் தொலைவில் உள்ளது. பைத்துல முகத்தஸின் வழியில் அமைந்துள்ளது. ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களும் அதே வருடம் அதே பிளேக் நோயால் வஃபாத் ஆனார்கள்.

(அல்இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 1405 முஆஸ் பின் ஜபல் பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 4 பக்கம் 177,178)

கஸீர் பின் முர்ரா அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் தாம் நோயுற்றிருந்த காலத்தில் எங்களிடம் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து ஒரு விஷயத்தைக் கேட்டேன். அதை நான் உங்களிடமிருந்து மறைத்து வைத்திருந்தேன். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன். எவருடைய கடைசி கூற்று 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று இருக்கிறதோ அவருக்கு சொர்க்கம் கடமையாகி விட்டது.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 355 முஸ்னத் முஆஸ் பின் ஜபல் ஹதீஸ் எண் 22383 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

இன்னோர் அறிவிப்பில் உள்ளது. நான் உங்களுக்கு இந்த ஹதீஸை எடுத்துரைப்பதிலிருந்து இந்த விஷயம்தான் தடுத்தது. அதாவது, நீங்கள் அதையே நம்பி இருந்து விடக்கூடாது. மற்ற நற்செயல்களை விட்டுவிடக்கூடாது.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 361 முஸ்னத் முஆஸ் பின் ஜபல் ஹதீஸ் எண் 22410 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

சிரியாவில் பிளேக் நோய் பரவியபோது ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களுக்கும் பிளேக் நோய் ஏற்பட்டுவிட்டபோது, அதன் காரணமாக அவர்கள் நினைவிழந்து விட்டார்கள். சிறிது நினைவு வந்தபோது கூறினார்கள்: அல்லாஹ்வே! நீ உனது வேதனையை என்மீது ஆதிக்கம் பெறச் செய்து விடுவாயாக. உனது கண்ணியத்தின் மீது ஆணையாக! நான் உன்மீது அன்பு கொண்டிருப்பதை நீ அறிவாய். பிறகு அவர்களுக்கு மயக்கம் வந்து விட்டது. பிறகு சிறிது நினைவு வந்தபோது இவ்வாறே மீண்டும் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களின் வஃபாத் நேரம் நெருங்கியபோது, விடிந்து விட்டதா? பாருங்கள் என்றார்கள். அப்பொழுது விடியவில்லை. எதுவரையெனில், விடிந்த பிறகு விடிந்து விட்டது என்று கூறப்பட்டது. எதன் விடியல் நரகத்தை நோக்கி அழைத்துச் செல்லுமோ அந்த இரவிடமிருந்து நான் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன். மரணத்தை நான் வரவேற்கிறேன். நான் எனது அன்பனுடன் என்னை இணைக்கக்கூடியதை வரவேற்கிறேன். அது நீண்ட காலத்துக்குப் பிறகு வருகிறது.

அல்லாஹ்வே! நான் உனக்கு அஞ்சுகிறேன் என்பதை நீ அறிவாய். ஆனால் இன்று நான் முழு நம்பிக்கையுடன் இருக்கிறேன். நான் உலகத்தையும் நீண்ட வாழ்வையும், அதில் நதிகள் தோண்ட வேண்டும்; மரங்களை நட வேண்டும் என்பதற்காக நேசிப்பதில்லை. மாறாக, மதிய வேளை தாகம் மற்றும் நிலைமைகளின் சிரமங்களை சந்தித்துக் கொள்ள வேண்டும். உனது குறிப்பு எடுத்துக் கூறப்படும் அந்த அறிஞர்களுடன் அமர வேண்டும்.

பிறகு பிறிதோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் முஆஸ் (ரலி)

## திருக்குர்ஆனிலிருந்து...

ஏதாவதொரு ஊருக்கு நாம் ஒரு தூதரை அனுப்பினால் அதில் வாழ்பவர்கள் பணிவை மேற்கொள்வதற்காகத் துன்பத்தையும், துயரத்தையும் கொண்டு அவர்களைப் பிடித்திருந்தோம். (7:95)

A.Shamsul Alam (Qaid Majlis Khuddamul Ahmadiyya, Melapalayam)

அவர்களின் மரணத்தருவாய் நெருங்கியபோது, அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? நீங்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழராயிற்றே! என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் கூறினார்கள்: நான் மரணிக்கப் போகும் வேதனையால் அழவில்லை. உலகத்தை விட்டுவிட்டுச் செல்வதனாலும் அழவில்லை. மாறாக, நான் ஏன் அழுகிறேன் என்றால், இரண்டு பிரிவுகள் இருப்பர். நான் எந்தப் பிரிவில் உயர்த்தப்படுவேன் என்று எனக்குத் தெரியாது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் ஸஹாபா தொகுதி 15 பக்கம் 189 முஆஸ் பின் ஜபல் – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஒன்று சொர்க்கவாசிகள்; மற்றொன்று நரகவாசிகளின் பிரிவு. எனக்கு அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் உள்ளதன் காரணமாகவே அழுகிறேன். முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பலில் இந்த அறிவிப்பு உள்ளது. அதாவது ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக்கேட்டேன். விரைவில் நீர் சிரியாவை நோக்கி ஹிஜ்ரத் மேற்கொள்வீர். அது உமது கையால் வெற்றி கொள்ளப்படும். ஆனால் அங்கு கொப்பளங்களும், கட்டிகளும் கொண்ட ஒரு நோய் உம்மை ஆட்கொண்டு விடும். அது மனிதர்களை ஏணியின் படிகள் மூலம் பிடித்துக் கொள்ளும். அல்லாஹ் அதன் மூலமாக அவர்களுக்கு ஷஹாதத் வழங்குவான். மேலும் அவர்களின் செயல்களைத் தூய்மைப்படுத்துவான். அல்லாஹ்வே நீ அறிவாய்! முஆஸ் பின் ஜபல் இந்த ஹதீஸை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டிருந்தால் அவர்களுக்கும் அவரது வீட்டாருக்கும் இதன் பெரும் பங்கை அளிப்பாயாக. இதை அவர்கள் கூறுகிறார்கள்.

ஆக அவர்கள் அனைவரும் அந்த பிளேக் நோயில் மூழ்கிவிட்டனர். அவர்களில் ஒருவர் கூட உயிர் தப்பவில்லை. ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களின் ஷஹாதத் விரலில் பிளேக்கின் கட்டி வெளிப்பட்டபோது அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: எனக்கு இதற்குப் பதிலாக செந்நிற ஒட்டகம் கிடைப்பதும் விருப்பமில்லை. நான் இதிலேயே மகிழ்ச்சியடைகிறேன்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 371 முஸ்னத் முஆஸ் பின் ஜபல் ஹதீஸ் எண் 22439 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

தாரீக் திப்ரி புத்தகத்தில் உள்ளது; அவர்களின் உள்ளங்கையில் கட்டி வந்தது. அவர்கள் தமது உள்ளங்கையை பார்ப்பார்கள். அந்தக் கையின் பிற்பகுதியை முத்தமிடுவார்கள். மேலும் உனக்குப் பதிலாக உலகின் எந்தப் பொருள் கிடைத்தாலும் எனக்கு விருப்பமில்லை என்று கூறுவார்கள்.

(தாரீஹுத் திப்ரீ தொகுதி 4 பக்கம் 238.... பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 18 ல் வஃபாத் ஆனார்கள். அவர்களின் வயதைப்பற்றி பல கருத்துகள் உள்ளன. அவற்றிற்கேற்ப 33,34 மற்றும் 38 வயது என்று கூறப்பட்டுள்ளது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 190 முஆஸ் பின் ஜபல் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களின் அறிவிப்புகளின் எண்ணிக்கை, ஹதீஸ்களில் இருப்பது 157 ஆகும். அதில் இரண்டு ஹதீஸ்கள் மீது புகாரியும், முஸ்லிமும் ஒருமித்திருக்கின்றன. இரண்டிலும் அவை இடம் பெற்றுள்ளன.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 156 முஆஸ் பின் ஜபல் (ரலி) – லாஹூரில் அச்சிடப்பட்டது)

அடுத்து எடுத்துக் கூறப்போகின்ற சஹாபி ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் அன்ஸார் கோத்திரமான கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளைக் கோத்திரமான பனூ சலமாவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அவர்களின் தந்தையார் பெயர் அம்ர் பின் ஹராம்; தாயார் பெயர் ரிபாப் பின் கைஸ் ஆகும்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 423 அப்துல்லாஹ் பின் உமர் – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்கள் ஹிஜ்ரத்துக்கு ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன் பிறந்தார்கள். அதாவது ஹிஜ்ரத் சமயத்தில் அவர்களுக்கு 40 வயது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் ஒரு புகழ்பெற்ற சஹாபியான ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் அவர்களின் தந்தை ஆவார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸிஸ் ஸஹாபா தொகுதி 4 பக்கம் 162 அப்துல்லாஹ் பின் உமர் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஹ் (ரலி) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர் ஆவார்கள்.

(ஹிதாபாத்தே தாஹிர் (தகாரீர் ஜல்ஸா ஸாலானா கப்ல் அஸ் கிலாஃபத்) தக்ரீர் ஜல்ஸா ஸாலானா 1979 பக்கம் 349)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் இரண்டாவது பைஅத்தே அக்பாவில் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்டிருந்த 12 கண்காணிப்பாளர்களில் ஒருவராக அன்னார் இருந்தார்கள். அவர்கள் பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டார்கள். உஹது போரில் ஷஹீதானார்கள். சிலரது பார்வையில், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் உஹது போரில் முஸ்லிம்கள் சார்பாக ஷஹீதான முதல் நபர் ஆவார்கள்.

(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபதிஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 84 அப்துல்லாஹ் பின் உமர் – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அவர்கள் ஈமான் கொண்ட சம்பவம் இவ்வாறு எடுத்துக் கூறப்படுகிறது. ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கிறார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தஹ்ரீக் நாட்களில் அதாவது ஹஜ் நாட்களின் கடைசி மூன்று நாட்களில் துல் ஹஜ் பிறை பதினொன்றிலிருந்து பதிமூன்றுவரை அதில் நடுநாளில் அகபாவில் சந்திப்பதற்கான வாக்குறுதி அளித்தோம். அகபா மக்காவுக்கும் மினாவுக்கும் நடுவில் உள்ளது. முன்னரும் கூறியிருக்கிறேன்.

நாங்கள் ஹஜ் செய்து முடித்த பிறகு நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வாக்குறுதியளித்திருந்த அந்த இரவு வந்தபோது, எங்களுடன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்களும் இருந்தார்கள். அவர்கள் எங்கள் தலைவர்களில் ஒரு தலைவராக இருந்தார்கள். எங்களின் கண்ணியத்திறகுரியவர்களில் ஒருவராக இருந்தார்கள். அவர்களை நாங்கள் எங்களுடன் அழைத்துச் சென்றோம். நாங்கள் எங்கள் விவகாரத்தை மறைத்து வைத்திருந்தோம். நாங்கள் அவர்களிடம் கூறினோம்: அபூ ஜாபிரே! நீங்கள் எங்கள் தலைவர்களில் ஒருவர் ஆவீர்கள். எங்களின் கண்ணியத்திற்குரியவர்களில் – இவர்களின் புனைப்பெயர் அபூ ஜாபிர் என்றிருந்தது. எனவே அவர்களை அபூ ஜாபிர் என்றும் அழைத்து வந்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: நாங்கள் அவர்களிடம் கூறினோம்: நீங்கள் எங்களின் கண்ணியத்திற்குரியவர்களைச் சார்ந்தவராவீர்கள். நீங்கள் நரகின் விறகாவதை நாங்கள் விரும்பவில்லை. எனவே நாங்கள் அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்தோம். அக்வா எனும் இடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் செல்லுமாறு கூறினோம்.

அவர்கள் கூறினார்கள்: (ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். பைஅத்தே அக்பாவில் கலந்து கொண்டார்கள். கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 236... – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நானும் எனது தந்தையாரும் எனது இரு மாமாக்களும் அக்பா தோழர்களைச் சேர்ந்தவர்கள். அறிவிப்பாளர் இப்னு உயய்னா, இவர்கள் ஓர் அறிவிப்பாளர் ஆவார்கள். இப்னு உயய்னா கூறுகிறார்கள்: அவர்களில் ஹஸ்ரத் பரா பின் மஃரூர் அவர்களும் ஒருவராவார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாப் மனாகிப் அல்அன்ஸார் பாப் வஃபூதுல் அன்ஸார் இலன் நபி (ஸல்), ஹதீஸ் எண் 3890,3891)

இரண்டாவது பைஅத்தே அக்பா பற்றி சீரத் காத்தமுன் நபிய்யீனிலிருந்து ஒரு சஹாபியின் குறிப்பில் இன்னும் சொல்லப்போனால், இருவரைப் பற்றிய குறிப்புகளில் முன்னர் ஒரு விளக்கத்தை எடுத்துரைத்து விட்டேன். இங்கு சிறு பகுதியை மீண்டும் எடுத்துரைக்கிறேன். சீரத் காத்தமுன் நபிய்யீனில் இரண்டாவது பைஅத்தே அக்பா தொடர்பாக எழுதப்பட்டிருப்பதிலிருந்து ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களுடன் தொடர்புடைய பகுதியை எடுத்துரைக்கிறேன்.

நுபுவ்வத்தின் 13வது வருடத்தில் துல்ஹஜ்ஜா மாதத்தில் ஹஜ் சந்தர்ப்பத்தில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரங்களின் பல நூறு மக்கள் மக்கா வந்தனர். அவர்களில் 70 பேர் எத்தகையவர்கள் எனில் ஒன்று முஸ்லிமாகிவிட்டிருந்தனர். அல்லது அப்போது முஸ்லிமாக விரும்பினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்திப்பதற்காக மக்கா வந்தனர். அந்த சந்தர்ப்பத்தில் ஒரு கூட்டுச் சந்திப்பும் ஒரு தனிச் சந்திப்பும் தேவைப்பட்டது.

எனவே ஹஜ்ஜின் அம்சங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு துல்ஹஜ்ஜா மாதத்தின் நடுநாள் நிர்ணயிக்கப்பட்டது. அன்று நடு இரவுக்கருகில் இவர்கள் அனைவரும் கடந்த வருடப் பள்ளத்தாக்கில் வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்திக்க வேண்டும் என்று முடிவானது. இவ்வாறு சாவகாசமாகவும் நேரம் எடுத்துக் கொண்டும் தனிமையில் பேசக்கூடும் என்பதற்காக செயதனர். அன்னார் அன்ஸார் சகோதரர்களுக்கு ஒன்றாக வராதீர்கள். ஒருவர் ஒருவராக இருவர் இருவராக குறித்த நேரத்தில் நிர்ணயிக்கப்பட்ட பள்ளத்தாக்கை அடைந்து விடுங்கள்; உறங்குபவர்களை எழுப்பாதீர்கள்; வராதவர்களுக்காகக் காத்திருக்காதீர்கள் என்று வலியுறுத்திக் கூறினார்கள்.

ஆக குறிப்பிட்ட நாள் வந்தபோது இரவு நேரத்தில் மூன்றின் ஒரு பங்கு இரவு கழிந்திருந்த நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டிலிருந்து புறப்பட்டார்கள். வழியில் தமது சிறிய தந்தை அப்பாஸ் (ரலி) அவர்களையும் உடன் அழைத்துக் கொண்டார்கள். அவர்கள் அதுவரை இணை வைப்பாளராக இருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்டிருந்தார்கள். ஹாஷிம் கோத்திரத்தின் தலைவராக இந்தார்கள். பிறகு இருவரும் சேர்ந்து அந்தப் பள்ளத்தாக்கை அடைந்தார்கள். அதிக நேரம் கடந்திருக்காது. அன்ஸாரும் ஒருவர் ஒருவராக இருவர் இருவராக வந்தடைந்தார்கள். இவர்கள் 70 பேர் இருந்தனர். அவ்ஸ மற்றும் கஸ்ரஜ் ஆகிய இரு கோத்திரங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

எல்லாருக்கும் முதலாவதாக அப்பாஸ் (ரலி) அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். கஸ்ரஜ் கூட்டத்தாரே! ஹஸ்ரத் முஹம்மது (ஸல) அவர்கள் எங்கள் குடும்பத்தில் மிகவும் கண்ணியத்திற்குரியவரும், அன்பிற்குரியவரும் ஆவார். அந்தக் குடும்பம் இன்று வரை அவரைக் காப்பதற்கு பெறுப்பேற்று வருகிறது. ஒவ்வோர் அபாயத்திலும் அவருக்காக தைரியமாக நின்றிருக்கிறது. ஆனால் இப்போது முஹம்மது (ஸல்) அவர்களின் எண்ணம் தமது ஊரை விட்டு விட்டு உங்கள் ஊருக்கு வர வேண்டும் என்றிருக்கிறது.

ஆக நீங்கள் அவரை உங்களுடன் அழைத்துச் செல்ல விரும்பினால் நீங்கள் அவரை எல்லா விதத்திலும் பாதுகாக்க வேண்டும். எல்லா பகைவர்களுக்கு எதிராகவும் தைரியமாக நிற்க வேண்டும். நீங்கள் அதற்கு ஆயத்தமாக இருக்கின்றீர்கள் என்றால் நல்லது. இல்லையென்றால் இப்பொழுதே தெளிவாக மறுத்து விடுங்கள். ஏனெனில் தெள்ளத் தெளிவான விஷயம் நல்லதாகும் என்று கூறினார்கள்.

அன்ஸார் கோத்திரத்தின் வயது முதிர்த செல்வாக்குப் பெற்ற சான்றோர் பரா பின் மஃரூர் அவர்கள் கூறினார்கள்: அப்பாஸ் அவர்களே! நாங்கள் நீர் கூறியதைக் கேட்டு விட்டோம். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமாகத் தமது அருளுக்குரிய நாவினால் ஏதாவது கூற வேண்டும். எங்கள் மீது போட இருக்கும் பொறுப்புகளைப் பற்றிக் கூற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

இதைக்கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், திருக்குர்ஆனின் சில வசனங்களை ஓதினார்கள். பிறகு சுருக்கமான ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அதில் அன்னார் இஸ்லாத்தின் போதனையை எடுத்துரைத்தார்கள். இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் மற்றும் அடியார்களுக் செலுத்த வேண்டிய உரிமைகள் குறித்து விளக்கியவாறு கூறினார்கள்: எவ்வாறு நீங்கள் உங்கள் அன்பர்களையும், உறவினர்களையும் பாதுகாக்கின்றீர்களோ, அவ்வாறே தேவை ஏற்படும்போது என்னோடும் நடந்து கொள்ள வேண்டும் என்ற விஷயத்தை மட்டுமே நான் எனக்காக விரும்புகிறேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உரையாற்றி முடித்துவிட்டிருந்த பிறகு, பரா பின் மஃரூர் அவர்கள் அரபு நாட்டு வழக்கப்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கரங்களைத் தமது கைகளில் ஏந்தியவாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களை உண்மையுடன் தோன்றச் செய்த அந்த இறைவன் மீது ஆணையிட்டு நாங்கள் கூறுகிறோம். நாங்கள் எங்கள் உயிர்களைப் போன்று உங்களைப் பாதுகாப்போம்.

அவர்களில் ஒருவர், நாங்கள் பாதுகாப்போம் என்று உறுதியளிக்கிறோம்; ஆனால் உங்களுக்கு வெற்றி கிடைத்த பிறகு எங்களை விட்டுச் சென்று விட மாட்டீர்களே? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து கேட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்னகைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்: உங்கள் இரத்தம் எனது இரத்தமாக இருக்கும். உங்கள் தோழர்கள் எனது தோழர்களாக இருப்பர். உங்கள் பகைவர்கள் எனது பகைவர்களாக இருப்பர்.

இதைக்கேட்டு அப்பாஸ் பின் உபாதா அன்ஸாரி அவர்கள் தமது தோழர்களைப் பார்த்து, மக்களே! இந்த உறுதிமொழியின் வாக்குறுதியின் பொருள் என்ன என்று நீங்கள் புரிகின்றீர்களா?

இதன் பொருள் என்னவென்றால், இப்பொழுது நீங்கள் எல்லாக் கடுமையான கருப்பு நிறத்தவர்கள், நல்ல செந்நிறமுடையவர்கள், ஓரளவு கருப்பு நிறத்தவர்கள், செந்நிறமுடையவர்கள், ஓரளவு வெள்ளையர்கள், நல்ல வெண்மையானவர்கள் ஆகியோரை எதிர்த்துப் போரிட ஆயத்தமாக வேண்டும். எல்லாத் தியாகங்களுக்காகவும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

அதற்கு மக்கள், ஆம்! நாங்கள் அறிவோம். ஆனால் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அதற்குப் பதிலாக எங்களுக்கு என்ன கிடைக்கும்? என்று கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், உங்களுக்கு அல்லாஹ்வின் சொர்க்கம் கிடைக்கும். அது அவனுடைய அனைத்து அருட்கொடைகளிலும் பெரிய அருட்கொடையாகும் என்று கூறினார்கள். அதற்கு அனைத்து மக்களும், எங்களுக்கு இந்த வாணிபம் சம்மதம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உங்கள் கையை நீட்டுங்கள் என்று கூறினர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரி கரத்தை முன் வைத்தவுடன் இந்த எழுபது உயிரை அர்ப்பணிக்கக் கூடியவர்களின் குழு ஒரு தற்காப்பு உடன்படிக்கையில், அன்னாரது கரங்களில் விற்றுப் போனது. இந்தப் பைஅத்தின் பெயர் இரண்டாவது பைஅத்தே அக்பாவாகும். பைஅத் முடிந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களிடம் கூறினார்கள்:

மூஸா தமது சமுதாயத்திலிருந்து பன்னிரெண்டு கண்காணிப்பாளர்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்கள் மூஸாவின் சார்பாக அம்மக்களைக் கண்காணிப்பவர்களாகவும் பாதுகாப்பவர்களாகவும் இருந்தார்கள். நானும் உங்களில் 12 கண்காணிப்பாளர்களை நியமிக்க விரும்புகிறேன். அவர்கள் உங்களின் கண்காணிப்பாளர்களாகவும் பாதுகாவலர்களாகவும் இருப்பர். அவர்கள் எனக்கு ஈஸாவின் சீடர்களைப் போன்று இருப்பர். தமது சமுதாயம் குறித்து எனக்கு முன் பதிலளிக்கக் கூடியவர்களாக இருப்பர். ஆக நீங்கள் பொருத்தமானவர்களின் பெயர்களை ஆலோசித்து எனக்கு முன் வையுங்கள்.

ஆக 12 பேர் முன் வைக்கப்பட்டனர். அவர்களுக்கு அன்னார் ஒப்புதல் வழங்கினார்கள். அவர்களை ஒவ்வொரு கோத்திரத்தின் கண்காணிப்பாளர்களாக நியமித்து அவர்களின் கடமைகளை புரிய வைத்தார்கள். சில கோத்திரங்களுக்கு அன்னார் இரண்டிரண்டு கண்காணிப்பாளர்களை நியமித்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 227–231)

ஓர் அறிவிப்பில் வருகிறது. உஹது போரின்போது மதீனாவின் நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் நம்பிக்கை துரோகம் செய்தபோது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்கள் அம்மக்களுக்கு அறிவுரை கூற முயன்றார்கள்.

(அல்லாமா முஹம்மது அஹ்மது அவர்கள் எழுதிய கஸ்வா உஹது என்ற நூல் பக்கம் 215 – 1989 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எனது தந்தையார் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களும் எனது மாமாவும் (தாயின் சகோதரரர்) உஹது போரில் ஷஹீதாகி விட்டார்கள். அப்போது எனது தாயார் மாமி (தந்தையின் சகோதரி) என்று பிறிதோர் அறிவிப்பில் வருகிறது. அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஹ் (ரலி) அவர்களின் துணைவியாராவார்கள்; அவர்கள் இவர்கள் இருவரையும் ஒட்டகத்தில் வைத்து மதீனா கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறிவிப்பாளர், இறந்தவர்களை அவர்கள் சண்டையிட்ட இடத்திலேயே அடக்கம் செய்யுங்கள் என்று அறிவித்தார்கள். இதைக்கேட்டு அவர்கள் இருவரும் திரும்பி எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் சண்டையிட்ட இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபதிஸ் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 287 அப்துல்லாஹ் பின் உமர் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 423 அப்துல்லாஹ் பின் உமர் – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பிறிதோர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கிறார்கள்: உஹது போரின்போது மதீனாவாசிகள் மத்தியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாகிவிட்டதாக செய்தி பரவி விட்டது. இந்தச் செய்தியைக் கேட்டு மதீனாவில் உள்ளவர்கள் அழுது புலம்பலனார்கள். அதைக் கேட்ட அன்ஸாரின் ஒரு பெண்மணியும் உஹது போர்க்களத்தை நோக்கி புறப்பட்டார். வழியில் அவர் தமது தந்தை, மகன், கணவர் மற்றும் சகோதரரின் சடலங்களைப் பார்த்தார். அவர் முதலில் யாரைப் பார்த்தார் என்று தெரியவில்லை என்று அறிவிப்பாளர் கூறுகிறார்.

அவர் அவர்களில் ஒருவரைக் கடந்து செல்லும்போது இது யார் என்று கேட்பார். அதற்கு மக்கள், உனது தந்தை, உனது சகோதரர், உனது கணவர், உனது மகன் என்று கூறுவர். அதற்கு அவர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலை என்ன? என்று கேட்பார். அதற்கு மக்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உனக்கு முன்னால் இருக்கிறார்கள் என்று கூறினர். எதுவரையெனில் அந்தப் பெண் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆடையின் விளிம்பைப் பிடித்துக் கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாய் தந்தையர் தங்கள் மீது அர்ப்பணமாகட்டும். தாங்கள் நலமுடன் இருக்கிறீர்கள் எனும்போது எனக்கு யாருடைய மரணத்தைப் பற்றியும் எந்தக் கவலையும் இல்லை.

(மஜ்மவுஸ் ஸவாஹித் தொகுதி 6 பக்கம் 120 கிதாபுல் மகாஸி... – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கிலாஃபத்துக்கு முன்னர் இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் ஆண்டு மாநாட்டில் சொற்பொழிவாற்றி வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் போர்கள் தொடர்பாக கூறி வந்தார்கள். அங்கு அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களைப் பற்றி எடுத்துரைத்ததையும் நான் இங்கு வாசித்து விடுகிறேன்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களின் சகோதரி அதாவது ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஹ் அவர்களின் துணைவியார், அவர்களும் தமது சகோதரரைப் போன்றே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பில் முழுவதுமாகத் திளைத்திருந்தார்கள். கணவர் அந்தப் போரில் ஷஹீதானார். சகோதரர் அந்தப் போரில் ஷஹீதானார். மகன் அந்தப் போரில் ஷஹீதானார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நலமாக இருககிறார்கள் என்ற மகிழ்ச்சி அந்த அனைத்து துன்பங்களையும் விட மேலோங்கி விட்டது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் நிலைமைகளைத் தெரிந்து கொள்ள போர்க்களத்தை நோக்கி சென்று கொண்டிருந்தேன். வழியில் எனக்கு ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஹ் (ரலி) அவர்களின் மனைவி ஹந்து ஓர் ஒட்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்தவாறு மதீனாவுக்குச் செல்ல கிடைத்தார். போர்க்களத்தின் தகவல் என்ன? என்று நான் அவரிடம் கேட்டேன்.

அதற்கு அவர், அனைத்தும் நன்றாக இருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் நன்றாக இருக்கின்றார்கள் என்று கூறினார்கள். இவ்வளவு நேரத்தில் எனது பார்வை ஒட்டகத்தின் மீது விழுந்தது. அதன் மீது ஏதோ ஏற்றப்பட்டிருந்தது. ஒட்டகத்தின் மீது இது என்ன ஏற்றப்பட்டுள்ளது? என்று நான் கேட்டேன். அதற்கு அவர், எனது கணவர் அம்ர் பின் ஜமூஹ் அவர்களின் சடலம், எனது சகோதரர் அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்களின் சடலம் மற்றும் எனது மகன் கல்லாதின் சடலமாகும் என்று கூறினார்.

இதைக்கூறி விட்டு அவர் மதீனாவை நோக்கி செல்லத் தொடங்கினார். ஆனால் ஒட்டகம் அமர்ந்து விட்டது. எவ்வாறும் எழுந்தபாடில்லை. கடைசியில், அது எழுந்தபோது மதீனாவை நோக்கி செல்ல மறுத்து விட்டது. அப்போது அவர் அதாவது அந்தப் பெண்மணி அதன் கடிவாளத்தை மீண்டும் உஹது மைதானத்தை நோக்கி திருப்பி விட்டார். அது மகிழ்ச்சியாக செல்ல ஆரம்பித்து விட்டது.

பிறகு அவர்கள் எழுதுகிறார்கள்: ஒரு புறம் அந்தப் பெண்ணுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இருந்த அன்பு நேசத்தின் நிகழ்வு தென்பட்டது. மறுபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம், செல்லுங்கள்! அம்ர் பின் ஜமூஹ் மற்றும் அப்துல்லாஹ் பின் அம்ர் ஆகிய இருவரின் சடலங்களையும் தேடுங்கள். அவர்கள் ஒன்றாக புதைக்கப்படுவார்கள். ஏனெனில் அவர்கள் இருவரும் இவ்வுலகில் ஒருவர் மற்றவரை நேசித்து வந்தார்கள் என்று கூறினார்கள்.

(ஹிதாபாத்தே தாஹிர் (தகாரீர் ஜல்ஸா ஸாலானா கப்ல் அஸ் கிலாபத்) தகாரீர் ஜல்ஸா ஸாலானா 1979 பக்கம் 350,351)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் அவ்விருவர் மீது அதிக அக்கறை இருந்தது.

ஓர் அறிவிப்பில் எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் உஹது போருக்காகப் புறப்பட எண்ணியபோது தமது மகன் ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும் அவர்களிடம், எனது மகனே! நான் ஷஹீதுகளில் முதலாவதாக இருக்கப்போவதாக பார்க்கிறேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எனக்குப் பின்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு உன்னைத் தவிர வேறு யாரையும் விட்டுச் செல்லவில்லை. நீ எனக்கு மிகவும் அன்பிற்குரியவன். எனது பொறுப்பில் சில கடன்கள் உள்ளன. எனது அந்தக் கடன்களை என் சார்பாக அடைத்து விடு. மேலும் நான் உனக்கு உனது சகோதரிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு வலியுறுத்திக் கூறுகிறேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அடுத்த நாள் காலையில் எனது தந்தையார் எல்லாருக்கும் முன் முதலாவதாக ஷஹீதானார்கள். பகைவர்கள் அவர்களின் மூக்கையும் காதுகளையும் வெட்டி விட்டார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபதிஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 344 அப்துல்லாஹ் பின் உமர், பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹதின் ஷஹீதுகளை அடக்கம் செய்வதற்காக வருகை தந்தபோது அன்னார் கூறினார்கள்: அவர்களை அவர்களின் காயங்களுடனே கஃபனிடுங்கள். ஏனெனில் நான் அவர்களுக்கு சாட்சியாளனாக உள்ளேன். அல்லாஹ்வின் வழியில் காயப்படுத்தப்பட்ட எந்த முஸ்லிமும், கியாமத் நாளன்று தனது இரத்தம் சிந்த, அது மஞ்சள் நிறத்தில் இருக்க, அதன் மணம் கஸ்தூரியின் மணமாக இருக்காமல் வர மாட்டார். அதாவது இவர்கள் அல்லாஹ்வுக்கு முன் ஆஜராகக்கூடிய பிடித்தமான மக்களாக இருப்பர். அவர்களை குளிப்பாட்டவோ, கஃபனிடவோ தேவையில்லை. அவர்களின் ஆடையே அவர்களின் கஃபனாகும்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எனது தந்தைக்கு ஒரு போர்வையில் கஃபனிடப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இவர்களில் யார் அதிகமாகத் திருக்குர்ஆன் அறிந்தவர்? இந்த ஷஹீதுகள் அடக்கம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள கூறி வந்தார்கள்: யார் அதிகமாக திருக்குர்ஆன் அறிந்தவர்? ஒருவரை நோக்கி சுட்டிக்காட்டப்படும்போது, அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவரை இவரது உடனிருப்பவர்களில், முதலாவதாக கப்ரில் இறக்குங்கள். அதாவது திருக்குர்ஆன் அறிந்திருந்த மக்கள் (மனனம் செய்திருந்தவர்களை) முதலில் அன்னார் அடக்கம் செய்ய கூறினார்கள்.

அதற்கு மக்கள், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் உஹது நாளில் எல்லாருக்கும் முதலாவதாக ஷஹீதானர்கள் என்று கூறினார். இப்பொழுது இதுவும் மக்களிடம் பேசப்பட்டது. அதாவது எல்லாருக்கும் முன்னதாக முதல் ஷஹீது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் ஆவார்கள். சுஃப்யான் பின் அப்து ஷம்ஸ் என்பவன் அவர்களை ஷஹீதாக்கினான்.

ஆக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோல்வி ஏற்படும் முன் இவர்களின் ஜனாஸாவைத் தொழ வைத்து விட்டார்கள். இரண்டாவது தாக்குதல் தொடுக்கப்பட்டது. அதற்கு முன்பாகவே இவர்களின் ஜனாஸா தொழப்பட்டு விட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அப்துல்லாஹ் பின் அம்ர் மற்றும் அப்தில்லாஹ் பின் ஜமூஹ் ஆகிய இருவரையும் ஒரே கபரில் நல்லடக்கம் செய்யுங்கள். ஏனெனில் இவர்களுக்கு மத்தியில் கலப்பற்ற தன்மையும், அன்பும் இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேலும் கூறினார்கள்: உலகில் பரஸ்பரம் அன்பு செலுத்தக் கூடியவர்களாக இருந்த இவர்களை ஒரே கபரில் நல்லடக்கம் செய்யுங்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் செந்நிறமுடையவர்களாக இருந்தார்கள். அவர்களின் தலையின் முன் பகுதியில் முடியிருக்கவில்லை. அதிகம் உயரமாகவும் அவர்கள் இருக்கவில்லை. ஆனால் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஹ் (ரலி) அவர்கள் உயரமானவர்களாக இருந்தார்கள். இதனால் இருவரும் அடையாளம் காணப்பட்டார்கள். இருவரையும் ஒரே கபரில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி சஅது தொகுதி 3 பக்கம் 424 அப்துல்லாஹ் பின் உமர் – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மீதம் இவர்களின் குறிப்பை இனி வருங்காலத்தில் எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

தமிழாக்கம்: மவ்லவி அதாவுல் முக்னீ

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஜெர்மனி சுற்றுப் பயணம் (ஜூன் 2014)

## 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி வியாழக்கிழமையன்று ஜல்ஸா ஸாலான ஏற்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டன

பெண்கள் ஜல்ஸா திடல் மற்றும் ஏற்பாடுகள் ஆய்வு செய்யப்பட்ட பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா அவர்கள் ஆண்களின் ஜல்ஸா திடலுக்கு வருகை தந்தார்கள். அங்கு நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஜல்ஸா சாலானாவின் பணிகளின் துவக்க விழா நடந்தது. ஜெர்மனி ஜல்ஸா ஸாலாவின் ஒட்டுமொத்த ஏற்பாடுகளுக்காக ஆண்டு மாநாட்டின் உயர் அதிகாரி, மாநாட்டுத் திடல் அதிகாரி, படைப்பின தொண்டு துறையின் நிர்வாகி ஆகியோருடன் 21 துணை நிர்வாகிகளும் இருந்தனர். 167 துறை சார்ந்த நிர்வாகிகளும், 486 துணை நிர்வாகிகளும் இடம் பெற்றிருந்தனர். தன்னார்வ தொண்டர்களின் எண்ணிக்கை 4970 ஆகும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா அவர்கள் மேடைக்கு வருகை தந்தார்கள். துவக்க விழா நிகழ்ச்சி திருக்குர்ஆன் ஓதுதல் மூலம் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய ஷேக் முனீர் அஹ்மது சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். அதன் உருது மொழிபெயர்ப்பு வாசிக்கப்பட்டது. அதன் பிறகு முஹம்மது ஹம்மாத் சாஹிப் அவர்கள் ஜெர்மன் மொழியாக்கத்தை வாசித்துக் காட்டினார்கள்.

## ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா அவர்களின் சொற்பொழிவு

அதன் பிறகு 9 மணிக்கு ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தஷஹ்ஹுத் மற்றும் தஅவ்வுத் ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினாார்கள்:

நாளை முதல் இன்ஷா அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகின்றது. ஜல்ஸாவிற்காக செய்யப்படும் ஏற்பாடுகளுக்கு இன்று இறுதி வடிவம் கொடுத்து வழக்கமான மரபுக்கேற்ப இன்று அது ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ஜெர்மனி அஹ்மதிய்யா ஜமாஅத்தில் தனது அறியாமையின் காரணமாக ஏற்பாடுகளில் ஒரு குறை ஏற்பட்டு விட்டது என்ற எதிர்பார்ப்பை இனி வைக்க முடியாது. அல்லாஹ்வின் அருளால் இங்கு நன்கு அனுபவம் வாய்ந்த தன்னார்வத் தொண்டர்கள் உள்ளனர். ஆயினும் ஏதாவதொரு குறை ஏற்பட முடியுமென்றால் அது மனித பலவீனத்தின் காரணமாகவே ஏற்படும். அல்லது நமக்கு தற்போது போதுமான அனுபவம் ஏற்பட்டு விட்டது என்று எல்லா விஷயத்தை சாதாரணமானதாக கருதுவதன் காரணத்தால் குறை ஏற்பட முடியும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தொண்டாற்றுகின்ற ஊழியர்கள் இதனை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது அவர் எங்கு சிறிதளவு தளர்ந்து விடுவாரோ அல்லது ஒரு வேலையை சாதாரணமானதாக கருதுவாரோ அங்கு பணியில் பரக்கத் ஏற்படாது. எனவே அனைத்து அதிகாரிகளும், துணை அதிகாரிகளும், ஏனைய தன்னார்வத் தொண்டார்களும் பல்வேறு துறைகளில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தனது பொறுப்புகளையும், பணிகளையும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதி பணியாற்ற வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பாகிஸ்தானிலிருந்து குடியுரிமை கேட்டு வருபவர்களின் எண்ணிக்கை கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக மிக அதிகமாக உள்ளது. அவர்களுக்கும் பணி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுக்கு அனுபவம் இல்லை. எனவே அவர்கள் தமது அதிகாரிகளிடமிருந்தோ அல்லது சக ஊழியர்களிடமிருந்தோ அவர்களின் அனுபவத்தை கற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். பாகிஸ்தானில் ஜல்ஸா நடைபெறவில்லை. 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே ஒரு நீண்ட இடைவெளியின் காரணமாக அவர்களுக்கு அனுபவம் இல்லை. ஜல்ஸாவின் இந்த பணிகள் மிகவும் பரந்த பணிகளாக உள்ளன. எனவே ஒவ்வோர் ஊழியரும் தனது பணியை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தாக கருதி தமது கடமையை ஆற்ற முயற்சி செய்ய வேண்டும். நமக்கு அனுபவம் உள்ளது. கடைசி நேரத்தில் நாம் சென்று விடலாம் என்ற எண்ணத்தில் இருக்காதீர்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நிரந்தர மனப்பான்மையுடன் பணி செய்யுங்கள். தொடர்ச்சியாக பணியாற்றுங்கள். தமது கடமைகளை நிறைவேற்றுங்கள். பின்னர் அல்லாஹ்வுடன் உங்களுக்கு தொடர்பு ஏற்படாதவரையும், அவன் பக்கம் திரும்பாதவரையும் உங்களது பணிகளில் அபிவிருத்தி ஏற்படாது. எனவே உங்களது தொழுகைகளை எப்பொழுதும் குறித்த நேரத்தில் தொழுவதற்கு முயற்சி செய்யுங்கள். இங்குள்ள சூழலில் ஆன்மீகத்தை மேலும் மெருகூட்டுவதற்கு உங்களது நாவுகளை துஆக்களால் நனைத்து விடுங்கள். இந்த ஆன்மீகத்தின் தாக்கம் உங்களது உடல்களிலும் வெளிப்பட வேண்டும். உங்களது நாவுகளிலும் வெளிப்பட வேண்டும். உங்களது எண்ணங்களிலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எனவே இது மிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். இதனை எப்பொழுதும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது நமது பணி என்பது உள்ளபடியே துஆவின் காரணமாகவே நடைபெறுகின்றது. இவ்வளவு பெரிய ஏற்பாடு உள்ளது. வெளியிலிருந்து மக்கள் வருகின்றனர். ஜல்ஸாவை பார்க்கின்றனர். அவர்கள் ஆச்சரியத்திற்கு உள்ளாகி விடுகின்றனர். நாம் அவர்களுக்கு இது ஒன்றும் தொழில் முறை சார்ந்த ஊழியர்களைக் கொண்டோ அல்லது பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்றவர்கள் எந்தவொரு துறையிலும் சிறப்பு வல்லுநர்களோ அல்ல. மாறாக, அனைவரும் தன்னார்வத் தொண்டர்கள் என்று கூறும்போது அவர்களின் ஆச்சரியம் எல்லையை கடந்து விடுகின்றது. எனவே இது நம்மீதும் நமது ஜமாஅத்தின் மீதும் அல்லாஹ் செய்துள்ள அருளாகும். இந்த அருளை மேலும் நாம் பெறுவதற்கு துஆக்களுக்கு அதிக தேவை உள்ளது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இதேபோன்று உலகத்திலுள்ள இன்றைய சூழலின் காரணமாக ஒவ்வொரு துறை சார்ந்த ஊழியரும் மற்றும் ஒட்டுமொத்தத்தில் ஒவ்வொரு அஹ்மதியும் தனது சுற்றுப் புறத்தின் சூழலின் மீது பார்வை வைக்க வேண்டும். அதாவது ஏதாவதொரு வழியில், ஏதாவதொரு வடிவில், ஏதாவதொரு பணியில் சீர்கேடு அல்லது தொல்லை தருவதற்கு எவரும் நம்மிடையே முயற்சி செய்கின்றாரா என்பதை நாம் கண்காணிக்க வேண்டும். எனவே இந்த விஷயங்களை நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களது கடமைகளை அழகிய முறையில் ஆற்றுவதற்கு உங்களுக்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக.

ஹுஸூர் அவர்கள் இந்த சொற்பொழிவிற்குப் பிறகு ஹுஸூர் துஆ செய்தார்கள். பின்னர் ஹுஸூர் அவர்கள் சிறிது நேரம் தனது தங்குமிடத்திற்கு சென்றார்கள். 9.45 மணிக்கு ஹுஸூர் அவர்கள்

வருகை தந்து மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை ஒன்றாக சேர்த்து தொழ வைத்தார்கள். தொழுது முடித்த பிறகு ஹுஸூர் அவர்கள் தனது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்று விட்டார்கள்.

ஜல்ஸா ஸாலாவின் மூன்று நாட்களில் ஹுஸூர் அவர்களின் தங்குமிடம் மாநாட்டுத் திடலில் ஒரு பெரும் கட்டிடத்தில் பரந்த இடத்தின் ஒரு பகுதியில் அமைந்தது.

**2014 ஜூன் 13 வெள்ளிக்கிழமை ஜெர்மனி ஆண்டு மாநாட்டின் முதல் நாள்**

ஹுஸூர் அவர்கள் காலை 4.20 மணிக்கு ஆண்களின் மாநாட்டு திடலுக்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை நடத்தினார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவவர்கள் தனது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்றார்கள். காலையில் ஹுஸூர் அவர்கள் அலுவலக கடிதங்களை படித்தார்கள். பல்வேறு தரப்பட்ட அலுவலக விவகாரங்களை மேற்கொண்டார்கள்.

இன்று அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் 39 வது ஆண்டு மாநாட்டின் முதல் நாளாகும். மதியம் 1:55 மணிக்கு ஹுஸூர் அவர்கள் தனது வீட்டிலிருந்து வெளியே வருகை தந்தார்கள். மேலும் கொடியேற்ற நிகழ்ச்சிக்காக மாநாட்டுத் திடலின் நான்கு ஹால்களுக்கு மத்தியில் இருக்கக்கூடிய திறந்தவெளி மைதானத்திற்கு சென்று ஹுஸூர் அவர்கள் அஹ்மதிய்யத்தின் கொடியை ஏற்றி வைத்தார்கள். மேலும் ஜெர்மனி அமீர் சாஹிப் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்கள். அஹ்மதிய்யத்தின் கொடி ஏற்றப்பட்டபோது ஜமாஅத் சகோதரர்கள் ரப்பனா தகப்பல்மின்ன இன்னக்க அன்தஸ் ஸமீவுல் அலீம் என்று துஆ செய்து கொண்டிருந்தார்கள்.

**ஹுஸூர் அவர்களின் குத்பா ஜுமுஆ**

இதன் பிறகு ஹுஸூர் அவர்கள் ஆண்களின் ஜல்ஸா திடலுக்கு சென்றார்கள். மேலும் ஜுமுஆ குத்பா உரை நிகழ்த்தினார்கள். அத்துடன் ஜல்ஸாவும் ஆரம்பமானது.

தஷஹ்ஹுத் தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் அருளால் இன்று ஜெர்மனி ஜல்ஸா இந்த குத்பா உரையுடன் ஆரம்பமாகின்றது. அல்லாஹ்வின் அருளால் ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகின்றது. இந்த ஆண்டும் அதிகமாக இருக்கும் என நம்புகிறோம். இன்ஷா அல்லாஹ். அதிகமாக இருக்கவும் வேண்டும். ஏனென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அனைத்து அஹ்மதிகளும் இந்த ஜல்ஸாவில் பங்கு பெற வேண்டும் என்று மீண்டும் மீண்டும் ஜமாஅத்திற்கு கவனமூட்டியுள்ளார்கள்.

எனவே ஜமாஅத்தினுடைய எண்ணிக்கை அதிகரித்து கொண்டிருப்பதற்கேற்ப ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டும். மேலும் அதற்காக மக்கள் கஷ்டங்களை சகித்துக் கொண்டு வருகை தர வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு ஜல்ஸாவிற்கான சந்தர்ப்பத்தை வழங்கி இருக்கின்றான். நீங்கள் நற்பாக்கியம் பெற்றவர்களாவீர்கள். பாகிஸ்தானில் ஜல்ஸாவிற்கு தடை உள்ளது.

எனவே அங்குள்ள அஹ்மதிகள் இந்த தடைகள் முடிவுக்கு வந்து நாமும் ஜல்ஸா நடத்திவிட வேண்டும் என்று நிம்மதியிழந்து இருக்கின்றனர். மேலும் ஜல்ஸாவின் நோக்கங்களாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியவற்றை அடைவதற்கு நாமும் முயற்சி செய்ய வேண்டுமே என்று அஹ்மதிகள் நிம்மதியிழந்து இருக்கின்றனர். மேலும் ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களுக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த துஆக்களை நாமும் பெற வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். பாகிஸ்தானிலிருந்து இங்கு வருகை தந்துள்ள விருந்தினர்களில் சிலர் என்னை சந்தித்தனர். பெண்களும் உள்ளனர். ஆண்களும் உள்ளனர். நாங்கள் இந்த அருட்கொடையிலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருக்கின்றோமே என்று அழுது அழுது அவர்களின் தொண்டை அடைத்து விட்டது. எங்களுக்கும் இந்த அருட்கொடை கிடைக்க வேண்டும் என துஆ செய்யுங்கள் என்று கூறினர்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஆக எவ்வாறிருப்பினும் நான் எப்போதும் கூறி வந்ததுபோன்று பாக்கிஸ்தானிய அஹ்மதிகள் இந்த கஷ்டங்களிலிருந்து வெளிவர வேண்டுமென்றால் அவர்கள் முன்பை விட அதிகமாக அல்லாஹ்வின் முன்பு குனிய வேண்டும். அல்லாஹ் அருட்களுக்கான ஏற்பாட்டை விரைவில் செய்வானாக. அநீதியாளர்களின் அநீதியிலிருந்தும், எதிரிகளின் எதிர்ப்பிலிருந்தும் நமக்கு ஈடேற்றம் வழங்குவானாக. இவை அனைத்தும் துஆக்களினால் மட்டுமே நடைபெறும். இது அல்லாமல் அதனை அடைவதற்கு வேறு எந்த ஆயுதமும் நம்மிடம் இல்லை.

எவ்வாறிருப்பினும் இங்கு வசிக்கக்கூடிய உங்களிடம் நான் கூறிக் கொண்டிருந்தது என்னவென்றால் நீங்கள் நற்பாக்கியம் பெற்ற மக்களாவீர்கள். அல்லாஹ் உங்களுக்கு எளிமையை உருவாக்கி இருக்கின்றான். நீங்கள் ஜல்ஸாவையும் நடத்தி வருகின்றீர்கள். எல்லா வகையான இஜ்திமாக்களையும் நடத்துகின்றீர்கள். எல்லா மட்டத்திலும் கூட்டங்களையும் நடத்துகின்றீர்கள். எனவே அதற்காக நீங்கள் அல்லாஹ்விற்கு நன்றி கூற வேண்டும். நன்றி கூறுவது என்னவென்றால், ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளிலிருந்து முழுமையாக பயன் பெற வேண்டும். ஜல்ஸாவின் நாட்களிலும் அதன் பிறகும் என்ன நல்ல விஷயங்களை நீங்கள் பார்த்தீர்களோ மற்றும் கேட்டீர்களோ அதனை உங்கள் வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பொறுமையுடன் மார்க்கத்தை தேடுவதும், மார்க்கத்தை மட்டுமே விரும்புவதும் ஜல்ஸாவின் நோக்கங்களாக கூறியுள்ளார்கள். அதாவது ஜல்ஸாவில் பங்கு பெறுகின்ற ஒவ்வொருவரும் இந்த எண்ணத்தில் ஜல்ஸாவிற்கு வருகை தர வேண்டும். அதாவது சிறு சிறு கஷ்டங்கள் மற்றும் துன்பங்களை சகிக்க நேரிட்டாலும் சகித்துக் கொள்வோம். பொறுமையற்ற வார்த்தைகளை கூற மாட்டோம் என்ற எண்ணம் வேண்டும். எங்களிடத்தில் இவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது; இவ்வாறு நடந்து கொள்ளப்பட்டு என்றெல்லாம் கூறக்கூடாது.

முதல் விஷயம், பொதுவாக இங்கு டியூட்டி கொடுக்கக்கூடியவர்கள் அல்லாஹ்வின் அருளால் தனது கடமைகளை ஆற்ற முயற்சி செய்கின்றார்கள். எவர்களிடத்தில் குறை இருக்குமோ அதை நான் மீண்டும் அவர்களுக்கு நினைவூட்டி விடுகின்றேன். அதாவது பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையுடன் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கு உங்களை கடமைகளை ஆற்றுங்கள் என்று கூறுகின்றேன். ஆனால் அத்துடன் நான் ஜல்ஸாவில் பங்கு பெறுபவர்களுக்கும் கூறுவேன். நீங்கள் மார்க்கத்தை கற்றுக் கொள்ள வேண்டும் மற்றும் இந்த சூழலில் ஆன்மீக முன்னேற்றத்திற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். பின்னர் இந்த ஆன்மீக முன்னேற்றத்தில் உங்களது சந்ததிகளையும் பங்கு பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே ஜல்ஸாவில் கலந்து கொள்வதன் நோக்கமாக இருக்க வேண்டும்.

*(தொடரும்...)*

EDITOR
Moulavai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Moulavai. ABDUR RAHMAN THAIR
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 03 December 2020 Issue No. 49

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கூற்றுகளை கேலி மற்றும் கிண்டல் செய்யும் சந்தர்ப்பத்தில் எடுத்துரைப்பது மிகவும் ஆபத்தான விஷயமாகும். அது உள்ளத்தை கருமை ஆக்கிவிடுகின்றது. எந்த நபரிடத்தில் சகிப்புத்தன்மை இருக்காதோ அவரே இதுபோன்ற ஏளனத்தை செய்ய முடியும். எவரிடத்தில் சகிப்புத்தன்மை இல்லையோ அவர் மார்க்கத்திற்கும் பயனுள்ளவராக இருக்க மாட்டார். உலகத்திற்கும் பயன்பட மாட்டார்**

அல்லாஹ் பனீ இஸ்ராயீலுக்கு நீங்கள் حِطَّةٌ அதாவது அல்லாஹ்வே! எங்களது பாவங்களை மன்னித்து விடுவாயாக என்று கூறுங்கள் எனக் கட்டளையிட்டான். ஆனால் அவர்கள் حِنْطَةٌ அதாவது எங்களுக்கு கோதுமை கிடைக்கட்டுமாக என கேலியாக கூறத் தொடங்கினர். அவர்களிடத்தில் சுட சுட கோதுமை ரொட்டிகளுக்கான பேராசை தோன்றியிருந்தது. மேலும் அவர்கள் حِطَّةٌ என்பதை சிதைத்து حِنْطَةٌ என்று கூறத் தொடங்கி விட்டனர். ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள்! எவ்வளவு சிறிய விஷயமாகும். ஆனால் அது இறைவனின் கோபத்திற்கு காரணமாகி விட்டது. அதற்கு காரணம் என்னவென்றால், நன்மையில் மனிதன் சகிப்புத்தன்மை மூலமாக மட்டுமே முன்னேற முடியும். மனிதன் எவ்வளவுதான் இறைவணக்கங்கள் செய்தாலும் எவ்வளவுதான் சமுதாயங்களுக்கு தொண்டாற்றினாலும் சரி! அவனிடத்தில் சகிப்புத்தன்மை இல்லையென்றால் அவனால் ஒருபோதும் ஆன்மீகத்தில் முன்னேற முடியாது. மேலும் சமுதாயத்திற்கும் சரியாக பயனுள்ளவராக இருக்க முடியாது. இன்னும் சொல்வதென்றால், சகிப்புத்தன்மையற்ற மனிதர்கள் சில முறை சமுதாயத்தை அபாயகரமான அழிவின் குழியில் தள்ளி விடுகின்றனர். வெளிப்படையில் حِطَّةٌ என்பதை حِنْطَةٌ என்று கூறுவது ஒரு சாதாரண விஷயமாகவே தெரிகின்றது. ஆனால் அதனை சீர்தூக்கிப் பார்த்தால் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். ஏனென்றால் இறைவனின் கூற்று கேலி செய்யப்பட்டுள்ளது. எவரிடத்தில் சகிப்புத்தன்மை இல்லையோ அவர் மார்க்கத்திற்கும் பயனுள்ளவராக இருக்க மாட்டார். உலகத்திற்கும் பயன்பட மாட்டார்.

சின்னச்சின்ன ஆத்திரமூட்டும் சந்தர்ப்பங்களிலும், பேராசைக்கான சந்தர்ப்பங்களிலும் அதுபோன்ற மனிதர்கள் மார்க்கம் மற்றும் தேசத்திற்கு துரோகம் செய்ய ஆயத்தமாகி விடுகின்றனர். இன்று முஸ்லிம்களின் நிலையும் இதுபோன்றே உள்ளது. மார்க்கமற்றவர்களாக இருப்பவர்கள், மார்க்கமற்றவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் மார்க்கவாதிகளாகவும் ஆலிம்களாகவும் அல்லது சூஃபிகளாகவும் அழைக்கப்படுபவர்களும் கூட மார்க்க விஷயங்களை கேலி செய்து விடுகின்றனர். சில முறை பொறுத்தமற்ற இடத்தில் திருக்குர்ஆன் வசனங்களை ஓதுவார்கள். சில முறை கேலிக்குரிய சந்தர்ப்பங்களில் நபிமொழியை படித்து விடுவார்கள். ஆனால் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் அந்தஸ்து மிகவும் உயர்வானதாக உள்ளது. அவர்களின் கூற்றுகளை கேலி மற்றும் ஏளனத்திற்குரிய சந்தர்ப்பங்களில் எடுத்துரைப்பது மிகவும் அபாயகரமான விஷயமாகும்.

இந்த விஷயம் உள்ளத்தை கறுமையாக்கி விடும். ஆன்மீகத்தை அழித்து விடும். இறையச்சத்தை நசுக்கி விடும். இந்த பாவத்திலிருந்து மீட்சி பெறுவதற்கு எந்தவொரு பெரும் முயற்சிக்குகூட அவசியமில்லை. எந்தவொரு பேராசையும் அமுக்குவதற்கான கேள்விக்கும் இடமில்லை. மிக சாதாரண ஒரு கவனம் போதுமானதாகும். எவர்களிடத்தில் இந்த நோய் காணப்படுகின்றதோ அவர்கள் சிறிதளவு கவனம் செலுத்தினால் இந்த குறைபாட்டை அகற்றிவிட முடியும். சிறிய முயற்சியால் பெரும் பெரும் பணிகளுக்கு அவர்களை ஆயத்தமாக்கக்கூடிய சீர்திருத்தத்தை செய்து விட முடியும்.

எனவே இறைவனுடைய கூற்றுகளையும், அவனது தூதரின் கூற்றுகளையும் கேலி, கிண்டல் செய்வதை முற்றிலுமாக கைவிட்டு விடுங்கள். இந்த பாவம் சுவையற்றதாகும். மேலும் மனித உள்ளத்தை முற்றிலும் மரணிக்கச் செய்து விடுகின்றது. இறைவன் மற்றும் அவனது தூதரின் நினைவு வரும்போதெல்லாம் உள்ளத்தில் அச்சம் தோன்ற வேண்டும். அதன் மூலம் நேசம் ஏற்படும். அவனது நினைவு ஒருபோதும் கவனத்தை ஈர்க்காமல் இருப்பதில்லை. தனது தாய் தந்தையை எவரும் எள்ளிநகையாடுவதில்லை. தனது தாய் தந்தையின் கூற்றுகளை எவரும் கேலி கிண்டல் செய்வதில்லை. அவ்வாறிருக்க இறைவன் மற்றும் அவனது தூதரின் கூற்றுகளை கேலி கிண்டலுக்குரிய சந்தர்ப்பத்தில் ஏன் பயன்படுத்த வேண்டும்? இறைவன் மற்றும் அவனது தூதரின் பெயரை ஏன் ஏளனத்துடன் பயன்படுத்த வேண்டும்? ஒரு நொடிப்பொழுது நகைச்சுவைக்காக வாழ்நாள் முழுவதுமான இறைவணக்கத்தை ஏன் வீணடிக்க வேண்டும்? اَلْحَذَرُ ثُمَّ الْحَذَرُ
(பொருள்: தப்பித்துக் கொள்ளுங்கள்; தப்பித்துக் கொள்ளுங்கள் – மொழிபெயர்ப்பாளர்)

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 1 பக்கம் 469, 470 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

♦ உபாயா பின் ரிஃபா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஜுமுஆவிற்கு சென்று கொண்டிருந்தேன். ஹஸ்ரத் அபூ அபஸ் (அப்துர் ரஹ்மான் பின் ஜபர் – ரலி) அவர்கள் என்னை சந்தித்தார்கள். அன்னார் என்னிடம் கூறினார்கள்:

எவரது கால்களில் அல்லாஹ்வின் வழியில் தூசி படிந்திருக்குமோ அவர் மீது அல்லாஹ் நரகத்தை ஹராமாக்கி விட்டான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டேன்.

(சஹீஹ் புகாரி தொகுதி 2 பாடம்: அல் ஜுமுஆ – 2006 ஆம் ஆண்டு காதியான் பதிப்பு)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad